
GOKULAM
மே 2008 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்
கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!
கிரிக்கெட் திருவிழா!
விடுமுறை
கொண்டாட்டம் – 2
அறிவோடு விளையாடு!
32 பக்கங்களில் புதிர்கள்
கோடையிலே 'ரன்' மழை!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


451


452


453


454


455


456


457


458


459


460


461


462


463


464


465


466


467


468


469


470


471


472


473


474


475

கோகுலம்

மே 2008 மலர் : 26 இதழ் : 4

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கோடை விடுமுறையும் கிரிக்கெட் ட்வெண்டி-ட்வெண்டி போட்டிகளும் ஒண்ணா வந்தாலும் வந்துச்சு, திரும்பின பக்கமெல்லாம் கிரிக்கெட் பத்தியே பேச்சு. ஆளாளுக்கு கையில் மட்டையும் பந்துமா சுத்தறாங்க. உலகின் சிறந்த கிரிக்கெட் வீரர்கள் எல்லாம் இந்தியாவுல வந்து இறங்கி இருக்காங்க. விளையாட்டானது சாதி, மதம், மொழி பேதம் எதுவுமில்லாம மக்களை இணைக்கிற சக்தி. ஜெயிக்கிறது யாருங்கறது முக்கியமில்லை, அவங்க எப்படி ஜெயிச்சாங்க... எவ்வளவு திறமையா செயல்பட்டாங்க... அதுதான் முக்கியம்! அத்தகைய திறமைசாலிகளை மனதார பாராட்டுவோம். இது விளையாட்டுக்கு மட்டுமில்லே, எல்லாவற்றுக்கும் பொருந்தும். ஒரு விஷயத்தைச் செய்யும்போது கவனம் முழுவதையும் அதுல செலுத்தி, ஈடுபாட்டோடு செய்தால் வெற்றி கிடைக்கும். நம்ம திறமை வெளிப்பட்டு, எல்லோரின் பாராட்டும் கிடைக்கும். நீங்களும் அப்படி திறமைசாலியா உயர வாழ்த்துகள்!



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

உதவி ஆசிரியர் :
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324, 4343 8888.

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : **25 யு.எஸ்.டாலர்**

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

குட்டீஸ்களின் 'கோடை' ப்ளான்




* வி.ஜுகாகன்


விட்டாச்சு லீவு! இந்த விடுமுறைக்கு சில குட்டீஸ் பக்காவாக 'ப்ளான்' போட்டு வைத்திருக்கிறார்கள். இதோ அவர்கள் சொன்ன சில விடுமுறை திட்டங்கள்...

மூன்றாம் வகுப்பு படித்துவரும் **எஸ்.ஆகாஷ்:** "கிரிக்கெட், பேஸ்கட் பால், டென்னிஸ்... இன்னும் நிறைய கேம்ஸ் ஆடப்போறேன். தினமும் எங்க தாத்தாகிட்ட ஒரு கதை கேட்டுட்டுத்தான் தூங்கப் போவேன். இனிமே, மூணு கதை சொல்லி ஆகணும்" என்று குறுநகை செய்யும் இவருக்கு, குளத்தில் மீன் பிடிப்பதில் அலாதி ஆசை!

* ஜி.வி. நிதீஷ்கிருஷ்ணா



ஸ்கேட்டிங்கில் ஸ்டேட் லெவலில்



இரண்டு வெவ்வேறு பிரிவுகளில் இரண்டாவது, மூன்றாவது இடம் பிடித்திருக்கும் சுட்டி **கே.மிருதுபாஷினி:** "நாலு வருஷமா ஸ்கேட்டிங் ப்ராக்டிஸ் பண்ணிக்கிட்டு இருக்கேன். இந்த வெகேஷன்ல மார்னிங், ஈவினிங் ரெண்டு வேளையிலும் ஸ்கேட்டிங்தான். இப்ப கொஞ்ச நாளா கீ போர்டு மேல இன்ட்ரஸ்ட் இருக்கு. 'கீ போர்டு கத்துக் கணும்'ன்னு அம்மாகிட்ட சொல்லி இருக்கேன். அவங்களும் ஓ.கே. சொல்லி இருக்காங்க" என்று வயத்தோடு பேசுகிறார்.

ஜி.வி. நிதீஷ்கிருஷ்ணாவிடம் வெகேஷன் பற்றிக் கேட்டால், பெரிய பட்டியலே போடுகிறார்.

மாலை மணி 3 முதல் 4 வரை ஐ.டி. கிட்ஸ் (IT Kids), 4 முதல் 5 வரை கிரிக்கெட் விளையாட்டு, 5 முதல் 6 வரை டிராயிங் கிளாஸ், காலை 8 மணி முதல் 9 மணி வரை வயலின் வகுப்பு... என்று நீள்கிறது.

"எனக்கு சயின்ஸ் எக்ஸ்பெரிமென்ட் பண்ணிப் பார்க்க ரொம்பப் பிடிக்கும். அது சம்பந்தமா நிறைய புக்ஸ் வாங்குவேன். ஸ்டோரி புக்ஸூம் இப்பவே நிறைய வாங்கி வைக்கணும்" என்று ப்ளானிங் கிங்காக இருக்கிறார். நிதீஷுக்கு திருவையாறு பக்கத்துல இருக்கிற ஈச்சங்குடி தாத்தா வீட்டுக்குப் போய் வயல் வெளிகளைச் சுத்திப் பார்க் கணும்ங்கிற பசுமையான ஆசையும் இருக்கு.



* வி.ஜனகன்

பலப்பல ஸ்டைல்களை 'குங்ஃபூ' மூலம் செய்து காட்டுகிறார் **வி.ஜனகன்**. "குங்ஃபூல மூணு பெல்ட் வாங்கி இருக்கேன்." என்று சொல்லும் இவருக்கு, சைக்கிள் ஓட்டுவதில் அலாதி பிரியம்.



"லீவுல, சென்னையில இருக்கற எங்க பாட்டி வீட்டுக்குப் போகப் போறேன். அங்க போயி பாட்டியோட கேரம் விளையாடி, அவங்கள ஜெயிப்பேன். அப்புறம் பீச்சுக்குப் போயி குதி.. குதி...ன்னு குதிப்பேன் அப்புறம்...ம்..'' என்று 'நான்-ஸ்டாப்'பாகப் பேசுகிறார் ஜனகன். •



* கே.மிருதுபாஷினி

பேட்டி, படங்கள்:
எம்.திரவிய முருகன்

ரொம்ப பிஸி!




கிராமியக் கலைகள் - 4

ரஞ்சனுக்கு உற்சாகமாக இருந்தது. நல்லூர் கிராமத்தில் ஒரு வாரமாக கரகாட்டம், பொய்க்கால் குதிரை என்று விதவிதமான நாட்டுப்புறக் கலைகளைக் கண்டு களித்தான்.

''ரஞ்சன், இன்னைக்கு பகலில் கொஞ்சம் தூங்கு. அப்பதான் ராத்திரி முழுக்க முழிச்சுட்டிருக்க முடியும்'' என்று சித்தப்பா கூறினார்.

''எதுக்காக ராத்திரி முழிக்கனும்? இன்னைக்கு சிவராத்திரியா, வைகுண்ட ஏகாதசியா?'' என்று கேட்டான் ரஞ்சன். அந்த இரண்டு நாட்களில் தூங்காமல் இருந்தால் புண்ணியம் என்று அம்மா கூறக் கேட்டிருக்கிறான்.

''ரஞ்சன், நாம இன்னிக்கு ராத்திரி தெருக் கூத்து பார்க்கப் போறோம்''



அருண் சரண்யா

தெருக் கூத்து!

என்றாள் தமிழ்ச்செல்வி.

''அது என்ன, ஒரு ரெண்டு, மூணு மணி நேரம் நடக்குமா?'' என்று ரஞ்சன் கேட்டான்.

''இதுகூடத் தெரியாதா? விடிய விடிய நடக்கும்'' என்றாள் அவள்.

அன்றிரவு, மூன்று தெருக்கள் கூடும் இடத்தில் பல பெஞ்ச்சுகளை இணைத்து மேடை அமைத்திருந்தார்கள். அந்த மேடையை ஒட்டி ஓர் அறையை ஓலைகளால் எழுப்பியிருந்தார்கள். அங்கிருந்துதான் ஒப்பனையோடு நடிகர்கள் மேடைக்கு வந்தனர். அன்று ராமாயணத் தெருக் கூத்து என்று அறிவிக்கப்பட்டது.

''முதல்லே யாரு வருவாங்க? ராமரா? சீதையா?'' என்று கேட்டான் ரஞ்சன்.

''எந்தத் தெருக் கூத்துன்னாலும் ஒருவர்தான் முதல்லே வருவார்'' என்றார் சித்தப்பா.

இரவு பத்து மணியானதும் மணி அடிக்கப்பட்டது. மேடையின் ஓரமாக ஹார்மோனியக்காரரும் மிருதங்கக் காரரும் வந்து உட்கார்ந்தனர். இசைக் கருவிகளில் சுருதி சேர்த்துக்கொண்டார்கள். இசை கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி, சட்டென்று நின்றது. அப்படி நின்றவுடன் மேடையில் தோன்றிய உருவத்தைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள். ரஞ்சனும் புன்னகைத்தான்.

மிகப் பெரிய தொப்பையோடு ஒரு கோமாளி நின்றுகொண்டிருந்தார். அவர் மூக்கின் மேல் எலுமிச்சம் பழம் மாதிரி எதையோ செருகியிருந்தார். அவரது தொப்பை குலுங்கிக்கொண்டே இருந்தது. தமது குழுவினர் அன்று நடத்தப் போகும் நாடகம் குறித்து விளக்கினார். 'எல்லோரும் அமைதியாக உட்கார்ந்து தெருக் கூத்தைப் பார்க்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கடுத்து மேடையில் தோன்றியவர் யார் என்று தெரியவில்லை. மேடையில் நின்றவரின் உருவம் தெரியாதபடி, அவருக்கு முன்னே ஒரு பெரிய படுதாவைப் பிடித்தபடி இரண்டு பேர் நின்றிருந்தனர். உருவம் தெரியவில்லை என்றாலும் அவரது தலையில் இருந்த கிரீடத்தின் உச்சிப் பகுதியை மட்டும் பார்க்க முடிந்தது.

''ராஜாதி ராஜன் மகன், தசரதச் சக்கரவர்த்தி மகன், ஸ்ரீராம சந்திரமூர்த்தி வந்தேனய்யா'' என்று பாடினார். மூன்றாவது முறை அதே வரிகளைப் பாடும் போது சட்டென்று திரையைப் பிடித்திருந்தவர்கள் விலகிச் செல்ல, அங்கே ஸ்ரீராமர் நின்றிருந்தார்.

தெருக் கூத்து தொடர்ந்தது. ரஞ்சனுக்கு பிரமிப்பாக இருந்தது. நடிகர்களின் ஆடைகளும் அலங்காரங்களும் மிகவும் சிறப்பாக இருந்தன. வசனங்களைவிட பாட்டுகள்தான் அதிகமாக இருந்தது. சீதை வேடத்தில் தோன்றியவர்

பெண் வேடம் போட்ட ஆண்களை 'ஸ்திரீபார்ட்' என்று அழைப்பார்கள்!



பாடியபோது அது ஆண்பிள்ளைக் குரலாக இருந்தது.

''பாவம் சித்தப்பா! அந்தப் பொண்ணு குரல் இப்படி இருக்குது'' என்று ரஞ்சன் கூறியதும், சித்தப்பா சிரித்தார். ''அது பொண்ணு இல்லே. ஆம்பளைதான். இந்தத் தெருக் கூத்திலே வேஷம் போடுறவங்க எல்லாருமே ஆண்கள்தான்'' என்றார். பெண்வேடம் போட்ட ஆண்களை 'ஸ்த்ரீபார்ட்' என்று அழைப்பார்களாம்!

நடுவே முறுக்கு, சுண்டல் விற்பவர்களெல்லாம் கீழே நடமாட, தெருக் கூத்து பார்க்க வந்தவர்களில் நிறையப் பேர் அவற்றை வாங்கிக் கொரித்தபடியே தெருக் கூத்தை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

சுமார் மூன்று மணி நேரம் போனதே தெரியவில்லை. அப்போது லேசாக கண்களைச் சுற்றியது. ஆனால் அந்தச் சமயம் பார்த்து பலத்த கைதட்டல்! மேடையில் அனுமார் வந்திருந்தார். அதற்குப் பிறகு பாடல்கள் வேகமான தாளத்தில் அமைந்திருந்தன. பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தினர் ''ராமா! ராமா!'' என்றபடி கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்.

விடியற்காலை ஆறு மணிக்குத்தான் தெருக் கூத்து முடிந்தது. 'எப்படித்தான் ஒரு முழு இரவும் கொஞ்சம்கூடத் தூங்காமல் இருந்தோமோ' என்று வியப்படைந்தான் ரஞ்சன். வீட்டுக்கு வந்த பிறகும்கூட அவனுக்குத் தூக்கம் வரவில்லை. தெருக் கூத்துக் காட்சிகளும், பாட்டுகளும் அவன் மனதில் தோன்றிக்கொண்டே இருந்தன. ○

துளிகள்...

பெரும்பாலும் கோடையில்தான் தெருக் கூத்து நடைபெறும். விவசாய வேலை குறைவாக இருப்பதே காரணம்.

- நாற்சந்திகளில் 'கேஸ் லைட்' வெளிச்சத்தில் தெருக் கூத்து நடைபெறும்.
- நாட்டுக் கூத்து, குறவைக் கூத்து, போர்க்காலக் கூத்து என்று கதைக்குத் தகுந்தமாதிரி அழைக்கப்படுகிறது.
- ராமாயணம், மகாபாரதம் ஆகியவையே தெருக் கூத்து ஆக்குவார்கள். சிலசமயம் மார்க்கண்டேயன் புராணம், வள்ளித் திருமணம், பிரகலாதன் - நரசிம்மர் ஆகிய கதைகளையும் கூத்தாக்குவார்கள்!
- ஹார்மோனியம் வாசிப்பவரே நடுநடுவே கதையின் போக்கை உரத்து விமர்சிப்பதுண்டு!



பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கு

யுவஸ்ரீ கலா பாரதி விருது

மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் இசை, படிப்பு, ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, விளையாட்டு ஆகிய துறைகளில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து விளங்குகிற L.K.G முதல் 12ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியருக்கு **'யுவஸ்ரீ கலா பாரதி'** என்ற விருதினையும் கல்லூரி மாணவ மாணவியருக்கு **'சுவாமி விவேகானந்தர்'** விருதினையும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வாரியாக வழங்கி வருகிறோம். ஒவ்வொருவருக்கும் வெள்ளிக்கேடயம் மற்றும் விருதுக்கான பெரிய அளவிலான பட்டயமும், ஸ்படிக மாலையும் வழங்கப்படும்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள அனைத்து மாவட்டத்தைச் சார்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்கு இவ்விருது வழங்கும் நிகழ்ச்சி அந்தந்த மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒவ்வொரு வகுப்பில் உள்ள அனைத்து பிரிவுகளில் இருந்தும் முதல் 5 ரேங்க் பெற்ற மாணவ மாணவியர் மற்றும் இசை, UC MAS, ABACUS ஓவியம், சமூகப்பணி, பரதநாட்டியம், பேச்சு, கவிதை, அனைத்துவிளையாட்டு, பொது அறிவுத்திறன், யோகா ஆகிய துறைகளில் தகுதியுடைய பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் தாங்கள் பெற்ற பரிசுக்கான ஜெராக்ஸ் பிரதிகளின் நகல்களுடன் அடியிற்கண்ட முகவரிக்கு ஒவ்வொருவருக்கும் வீட்டு முகவரி, தொலைபேசி எண்ணுடன் கூடிய ரூ.10 அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட கவருடன் உடன் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரம் அவர்களது வீட்டு முகவரிக்கு அனுப்பப்படும். விருது வழங்கும் விழாவில் அவரவருக்கு எடுக்கப்படும் புகைப்படச் செலவை ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஏற்க வேண்டும்.

நெல்லை பாலு,
நிறுவனர்-பாரதி யுவ கேந்திரா,
G-28, சாந்தி சதன் குடியிருப்பு,
கோச்சடை, மதுரை-625 016.
செல் 94439-30815, 94426 30815.

யுவஸ்ரீ கலா பாரதி விருதுக்கு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இசை, பரத நாட்டிய ஆசிரியைகள், ஓவியம், கராத்தே, யோகா மற்றும் UC MAS, ABACUS, HINDI மாஸ்டர்களும் தங்களிடம் பயிலும் சிறப்பானவர்களின் பெயர் பட்டியலையும் அனுப்பலாம். மேலும் கடந்த மூன்று ஆண்டுகளில் 10ம் வகுப்பு மற்றும் +2 பொதுத்தேர்வில் 80% மற்றும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்றவர்கள் தங்கள் பெற்ற மதிப்பெண் பட்டியலின் ஜெராக்ஸ் பிரதியுடனும் விண்ணப்பிக்கலாம்

கவிதை தொகுப்பு நூல்

பாரதி யுவ கேந்திரா சார்பில் 200 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து ஒரு கவிதைத் தொகுப்பு நூல் மே மாதத்தில் வெளியிட உள்ளோம். இந்நூலுக்கு கவிஞர்கள் 24 வரிகளுக்குள் மரபு அல்லது புதுக்கவிதை ஒன்று எழுதி எமது மேற்கண்ட முகவரிக்கு அனுப்பலாம். அத்தோடு ரூபாய் 250/- M.O. மூலம் அனுப்பவும். ஒவ்வொருவருக்கும் 5 புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படும்.

கவர் ஸ்டோரி

இந்தியாவின் ஒருமைப்பாட்டுச் சின்னமாக விளங்கும் விளையாட்டு கிரிக்கெட். காஷ்மீர் முதல் கன்னியா குமரி வரை இந்தியர்களை இணைக்கும் பாலம். ஆறிலிருந்து நூறு வயதுவரை அனைவரையும் ஈர்க்கும் சக்தி கிரிக் கெட் விளையாட்டுக்கு உண்டு!

சமீபத்தில் 19 வயதுக்குட்பட்டோருக் கான கிரிக்கெட் உலகக் கோப்பையை இந்திய இளம் புலிகள் வென்றனர். அதே தினத்தில், தோனி தலைமையில் ஆஸ்திரேலியாவில் வரலாறு படைத்து முத்தரப்புத் தொடரை இந்தியா வென் றது.

உலகக் கோப்பை 20/20

இந்தச் சாதனைகளுக்கு முன்னதாக 2007 ஆம் ஆண்டு முதன்முறையாக ட்வென்டி-ட்வென்டி உலகக் கோப்பை நடைபெற்றது. மிகவும் எதிர்பார்க்கப் பட்ட இதன் இறுதிப் போட்டியில் இந்தியாவும் - பாகிஸ்தானும் மோதின. இந்திய அணி முதலில் களமிறங்கி, 20 ஓவர்களில் ஐந்து விக்கெட்களை இழந்து, 157 ரன்களை எடுத்தது. கௌதம் கம்பீர் 54 பந்துகளைச் சந்தித்து 75 ரன்களை விளாசினார். இரண்டாவ தாகக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 19.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 152 ரன்கள் எடுத்தது.

கோடையிலே





முனைவர் ஆசுரா


ஐந்து ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.

ஐ.சி.எல். – ஐ.பி.எல்!

உலக கிரிக்கெட் ரசிகர்களைக் கவரும் புதிய நாயகனாக ட்வென்டி - ட்வென்டி போட்டிகள் மலர்ந்தன. இதன் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு உருவானது 'இந்தியன் கிரிக்கெட் லீக்' (ஐ.சி.எல்) என்னும் புதிய கிரிக்கெட் அமைப்பு. இந்த அமைப்பைத் தோற்று வித்தவர் சுபாஷ் சந்திரா. முன்னாள் கிரிக்கெட் வீரர்களான கபில்தேவ், டோனி கிரேக், டீன் ஜோன்ஸ், கிரன் மோர் ஆகியோர் நிர்வாகக் குழு உறுப் பினர்களாக விளங்குகின்றனர். ஐ.சி.எல் நடத்திய முதலாவது போட்டியில் எட்டு அணிகள் பங்கேற்றன. ஒவ்வொரு அணியிலும் வெளிநாட்டு வீரர்களும், நம் நாட்டு இளம் வீரர்களும் இணைந்து விளையாடினர். இதற்கு ரசிகர்களிடம் கிடைத்த வரவேற்பைக் கண்ட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் 'இந் தியன் பிரீமியர் லீக்' (ஐ.பி.எல்.) என்ற அமைப்பை உருவாக்கியது. இதுவும் ட்வென்டி - ட்வென்டி கிரிக்கெட் போட் டிகள்தான்! ஏலம் போட்டு, பெரும் பணத்தைக் கொடுத்து அணி கள் வீரர்களை விலைக்கு வாங்கியுள்ளன. ஐ.பி.எல். என்னும் பெயரோடு



'ரன்' மழை!



இணைந்து வரும் தலைப்பு விளம்பரம் மட்டும் ரூ. 200 கோடி ரூபாய்க்கு ஐந்தாண்டுகளுக்கு விற்பனையாகியுள்ளது. நடுவர்களின் உடையில் விளம்பரம் செய்யவும், மூன்றாம் நடுவர் முடிவின்போது



சேவாக்



யுவராஜ் சிங்



கபில்தேவ்

விளம்பரம் செய்யவும் ஐந்தாண்டுகளுக்கு ரூ. 106 கோடி அறிவித்துள்ளது.

அதிரடி அணிகள்!

ஐ.பி.எல். கிரிக்கெட் அதிரடி ரன் திருவிழாவில் பங்கேற்கும் எட்டு அணிகள்: மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ராயல் சேலஞ்சர்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி டேர் டெவில்ஸ், கிங்ஸ் XI பஞ்சாப், கொல்கத்தா நைட் ரைடர்ஸ், இராஜஸ்தான் ராயல்ஸ் ஆகும். ஐ.பி.எல். போட்டிகளில் அதிகமான தொகைக்கு ஏலம் எடுக்கப்பட்டவர் (ஆறு கோடி!) இருபத்தாறே வயது நிரம்பிய நம் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் மகேந்திர சிங் தோனி. இவர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கும் கேப்டன். இந்திய கிரிக்கெட் வீரர்களும், மற்றும் இளைய தலைமுறை கிரிக்கெட் வீரர்களும் இணைந்து கலக்கும் இந்த ஆட்டங்கள், இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் நாடி நரம்புகளை உற்சாக மூட்டுவது உறுதி!

தொடரும் திருவிழா!

கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின் அகராதியை மாற்றி எழுதிக் கொண்டிருக்கும் ஐ.பி.எல். போட்டிகள் ஏப்ரல் 18ஆம் தேதி தொடங்கி, களை கட்டி வருகிறது. இந்தத் திருவிழா ஜூன் முதல் தேதி வரை நடைபெறப் போகிறது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்குக் கோடை விடுமுறைக் கொண்டாட்டமாக இந்த ஐ.பி.எல். போட்டிகள் அமையும். கோடையில் மைதானங்களில் ரன் மழை கொட்டுவது உறுதி! உள்ளூர்ப் போட்டிகளை உலகப் போட்டிகள் போல மாற்றி, கிரிக்கெட் அணிகளை சர்வதேச அளவில் இணைத்து, இளையோர்களுக்கும் வாய்ப்பளிக்கும் இந்த ஐ.சி.எல். மற்றும் ஐ.பி.எல். அமைப்புகளின் முயற்சி பாராட்டுக்குரியது.

இந்த ட்வென்டி - ட்வென்டி கோலாகலம் முடிந்ததும் 9வது ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் ஜூன் 24ல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஆறு உலக அணிகள் பங்கேற்க உள்ளன. இவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தியா - பாகிஸ்தான் இரண்டு அணிகளும் ஒரே பிரிவில் இடம்பெற்று எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



'மலையளவு கிரிக்கெட்; மனம் நிறைய கிரிக்கெட்' என்னும் அளவுக்கு எங்கும், எதிலும் கிரிக்கெட் நிறைந்திருக்கிறது. இது குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் இனிய கோடை விருந்துதான்!

அட்டையில்:
ரோஹிந்த், கௌதம்
படம்: **ஸ்ரீஹரி**



மாணவப் பத்திரிகையாளர் திட்டம் - முடிவு!

மார்ச் 2008 இதழில் அறிவித்த 'மாணவப் பத்திரிகையாளர் திட்டம்' உங்களை மிகவும் உற்சாகப்படுத்தியதை எங்களுக்கு வந்த கடிதங்கள் மூலம் தெரிந்துகொண்டோம். நிறைய பேர் ஆவலுடன் கூப்பனை அனுப்பியிருந்தீர்கள். முதல் கட்டமாக நாங்கள் சொல்லியிருந்த விதிமுறைகளின்படி முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் தேர்ந்தெடுத்தோம். பிறகு அவற்றிலிருந்து ஆறு பேரைத் தேர்வு செய்தோம்.

எங்கள் அலுவலகத்துக்கு வந்து, ஜூன் 2008 'கோகுலம்' இதழைத் தயாரிக்கப் போகும் வெற்றியாளர்கள் இவர்கள்தான்:

1. அ. அனீஸ் ஃபாத்திமா, பத்தாம் வகுப்பு, எஸ்.ஏ.பி.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, உத்தமபாளையம்.
2. கு.நித்யானந்தன், பத்தாம் வகுப்பு, பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி, திருச்சி.
3. ப.இனியன், பதினொராம் வகுப்பு, ஜெயகோபால் கரோடியா தேசிய மேல்நிலைப் பள்ளி, சென்னை.
4. யாழினி அன்புமணி, எட்டாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம் மெட்ரிக் பள்ளி, ஈரோடு.
5. நா.வருண், எட்டாம் வகுப்பு, அழகப்பா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி
6. கோ.பிரவின்குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்.

'கோகுலம்' வாசகர் சார்பில் இவர்களுக்கு 'வாழ்த்து' தெரிவிப்போம். ஆவலுடன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி! மற்றவர்கள் மனம் தளர வேண்டாம். அடுத்த ஆண்டும் இந்த திட்டம் நடைபெறும். அப்போது பங்கு பெறுங்கள்!

தொடர்கதை


வீரா

முன்கதை: தங்கபுரியின் இளவரசன் தங்கமுகிலன். அவனது நண்பன் கேசவன். இருவரும் வீரபத்ரனின் குருகுலத்தில் படிக்கிறார்கள். அங்கே படிக்கும் இன்னொரு மாணவன் மாணிக்கம். அவனது நடவடிக்கையில் சந்தேகப்படும் முகிலன், இரவு கேசவனுடன் அருவிக்குச் செல்ல, அங்கே ராட்சத வெளவால் துரத்துகிறது. இனி...

''முகிலா...என்னால் இதற்குமேல் ஓட முடியாது. மூச்சு முட்டுகிறது. கால்கள் ஒடிந்துவிடும் போலிருக்கிறது'' என்றான் கேசவன்.

முகிலனுக்கும் அப்படித்தான் இருந்தது. இருட்டில் தடுமாறி விழுந்ததில் காலில் அடிபட்டிருந்தது. வெளவாலோ அவர்களை நெருங்கிவிட்டது. எந்த நொடியிலும் தாக்கலாம். அப்போது -

''சூரபத்ரா நில்!'' என்று ஒரு கட்டளையான குரல் வந்தது.



அந்த வெளவால் அசையாமல் நின்றது. முகிலனும் கேசவனும் நிமிர்ந்து பார்த்தார்கள். எதிரே வீரபத்ரன் நின்றிருந்தார். அவர் கண்களில் கோபம் மின்னியது. எப்போதும் சாந்தமான பார்வை, சன்னமான பேச்சுமாகவே பார்த்துப்

வாண்டுதாசன்


சூரா



பழகிய குருநாதரா இது? என்று வியப்பாக இருந்தது.

''சூரபத்ரா! இது என்ன விளையாட்டு?'' என்று அதட்டலுடன் கேட்டார் வீரபத்ரன்.

அதற்கு அந்த வௌவாலிடமிருந்து சிரிப்பு பதிலாக வந்தது. மனிதன் சிரிப்பதைப்



போலவே இருந்தது. சட்டென வாயைத் திறந்து மூடியது. அப்போது பந்துபோல் நெருப்பு வெளிப்பட்டு வீரபத்ரனை நோக்கி வந்தது. அவர் விலகினார்.

''ஹி...ஹி...ஹி...'' என்று சிரித்த வௌவால் திரும்பி, பறந்து மறைந்தது.

முகிலனும் கேசவனும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். அதேசமயம் குருநாதர் என்ன சொல்லப் போகிறாரோ? என நினைத்துப் பயந்தார்கள்.

''வாருங்கள் போகலாம்'' என்றவர் திரும்பி நடந்தார். வேறு எதுவும் பேசவில்லை. அதனால் இருவரும் மௌனமாகப் பின்தொடர்ந்தனர்.

குருகுலத்தை அடைந்ததும் முகிலனே பேசினான். ''குருநாதரே! எங்களை மன்னியுங்கள். உங்களிடம் சொல்லாமல் வெளியே சென்றது தவறுதான்'' என்றான்.

''எதற்காக இந்நேரத்தில் வெளியே சென்றீர்கள்?'' என்று கேட்டார்.

''அது...வந்து...'' என்று தயங்கினான் முகிலன்.

''நான் சொல்கிறேன் குருவே'' என்ற கேசவன், காலையில் மாணிக்கத்தை அருவியருகே பார்த்ததையும், அவன் பாறைக்குள் மாயமாக மறைந்ததையும் கூறினான்.

வீரபத்ரன் கண்களை மூடி அமைதியாக இருந்தார். பிறகு, மெதுவாகத் திறந்து இருவரையும் பார்த்தார். ''இந்த விஷயத்தை வேறு யாரிடமும் சொல்லவில்லைதானே?'' என்று கேட்டார்.

''இல்லை குருவே'' என்றான் முகிலன்.

''இனியும் சொல்ல வேண்டாம். இந்தப் பிரச்னையை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் போய்த் தூங்குங்கள்'' என்றார்.

''குருவே, அந்த வௌவால் உருவத்தில் இருந்தது யார்? சூரபத்ரன் என்று அழைத்தீர்களே... யார் அது?'' என்று கேட்டான் முகிலன்.

''அதற்கான நேரம் வரும்போது சொல்கிறேன் முகிலா! இப்போது நடந்

தைத மறந்துவிட்டுத் தூங்குங்கள்'' என்ற வீரபத்ரன், தமது அறைக்குள் சென்று விட்டார்.

''தூங்குவதா? கண்களை மூடினால் வௌவால்தான் வருகிறது. தூக்கம் எங்கே வரப் போகிறது?'' என்று சொன்னான் கேசவன்.

அறைக்குள் வந்த வீரபத்ரன், படுக்கைக்குச் செல்லவில்லை. சிறிது நேரம் அப்படியும் இப்படியுமாக நடமாடினார். பிறகு, பூஜையறைக்குள் நுழைந்தார். அங்கே சிறிய விக்ரகத்துக்குப் பின்னால் ஒரு பெட்டி இருந்தது. அதனை எடுத்து முன்னால் வைத்தார். சம்மணமிட்டு அமர்ந்தவர், கண்களை மூடி, பெட்டியைத் தொட்டு வணங்கினார்.

சில நிமிடங்கள் கூப்பிய கரங்களோடு இருந்தவர், கண்களைத் திறந்தார். பிறகு பெட்டியை மெதுவாகத் திறந்தார். பெட்டியைத் திறக்கத் திறக்க, ஒரு வெளிச்சம் அறைக்குள் பரவ ஆரம்பித்தது. முழுவதும் திறந்ததும் அந்த அறையே வெளிச்சத்தால் தகதகத்தது. பெட்டிக்குள் ஒரு வாள் மின்னியது. அதன் கைப்பிடியில் வைரக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.

வீரபத்ரன் அந்த வாளைக் கையில் எடுத்தார். அதனையே சிறிது நேரம் பார்த்தார். அவரது நினைவுக்குள் கடந்த காலம் திரையிட்டது.

அப்போது அவர் இளைஞர். வீரபத்ரனின் நண்பன் சூரபத்ரன். இருவரின் குருநாதர் தேவநாதன். ஆய கலைகள் அனைத்திலும் தேர்ந்தவர். அவருக்குத் தெரியாத மந்திர வித்தைகளே இல்லை.

அன்று -

''வீரா, சூரா... உங்கள் இருவரையும் மாணவர்களாக அடைந்ததை நினைக்கையில் மிகவும் சந்தோஷமாக உள்ளது. இதற்கு முன்பு எத்தனையோ மாணவர்கள் என்னிடம் வித்தைகளைக் கற்றுள்ளனர். ஆனால், யாருமே இந்த அளவுக்கு வேகமாகவும், நுணுக்கமாகவும் கற்றுக் கொண்டதில்லை. மந்திர வித்தைகள் மற்ற வித்தைகள் போலில்லை. இதனைக் கற்க திறமை மட்டும் இருந்தால் போதாது. பொறுமை, பெருந்தன்மை போன்ற பல குணங்களும் தேவை. நீங்கள் இருவரும் பல மந்திர வித்தைகளைப் பொறுமையாகக்



கற்றுக்கொண்டீர்கள்'' என்றார்.

இருவருக்கும் பெருமையாக இருந்தது. ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக்கொண்டார்கள். தேவநாதனைப் பற்றி நாடே அறியும். அவர் யாரையும் சுலபத்தில் புகழ மாட்டார். கல்வி கற்றுத் தருவதில் எந்த அளவுக்குச் சிறந்தவரோ அந்த அளவுக்குக் கோபக்காரரும்கூட!

சரியாகக் கற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு கடுமையான தண்டனை அளிப்பார். அரசன் மகனாக இருந்தா

லும் ஆண்டியின் மகனாக இருந்தாலும் அவருக்கு ஒன்றுதான். அதனாலேயே அவரிடம் கல்வி, வித்தைகளைக் கற்க, மிக அரிதாகவே மாணவர்கள் வருவார்கள். வீரபத்ரனும் சூரபத்ரனும் அப்படிப்பட்ட அரிய மாணவர்கள்.

''நாளை, உங்களுக்கு மிகவும் முக்கியமான மந்திரம் ஒன்றை கற்றுத் தரப்போகிறேன். எனக்குத் தெரிந்த

''நாளை உங்களுக்கு முக்கியமான மந்திரம் ஒன்றை கற்றுத் தரப்போகிறேன். எனக்குத் தெரிந்த மந்திரக் கலைகளின் உச்சம் அதுதான்!''

மந்திரக் கலைகளின் உச்சம் அதுதான். பிறகு ஒரு பரிசும் தருவேன். என்னோடு வாருங்கள்'' என்று கூறிய தேவநாதன், அவர்களைப் பூஜையறைக்கு அழைத்துச் சென்றார்.

வீரபத்ரனும் சூரபத்ரனும் ஆவலுடன் அவரைத் தொடர்ந்தனர். பணிவுடன் வணங்கி நின்றார்கள். தேவநாதன் ஒரு பெட்டியை எடுத்துத் திறந்தார். அதற்குள் தகதகத்தது அந்த வாள்.

''இது சாதாரண வாளல்ல. மந்திர வாள்! இது யார் கையில் இருக்கிறதோ அவன் நினைத்தது நடக்கும். இதன் ஆற்றலுக்கு ஒரு உதாரணம் பார்க்க விரும்புகிறீர்களா?'' என்று புன்னகையுடன் கேட்டார்.

இருவருக்கும் என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. மௌனமாக தேவநாதனையே பார்த்தார்கள். அவர் வெளியே வந்தார். இருவரும் பின் தொடர்ந்தனர்.

வாசலுக்கு வந்த தேவநாதன், கண்களை மூடி ஏதோ ஒரு மந்திரத்தை உச்சரித்தார். பிறகு தொலைவில் தெரிந்த மலையை நோக்கி வாளை நீட்டினார்.

அடுத்தகணம் - அந்த மலை சுக்கு நூறாக உடைந்தது. பூகம்பம் வந்ததைப் போல பெருத்த சத்தம்! சூரபத்ரனும் வீரபத்ரனும் அதிர்ந்து போனார்கள்.

தேவநாதன் புன்னகை மாறாமல் மீண்டும் ஒரு மந்திரத்தை உச்சரித்தார். சுக்கு நூறாகச் சிதறிய மலை முன்பு போல் முளைத்தது. இருவரும் திகைத்து நின்றார்கள்.

''வீரா, சூரா! இது சின்ன வித்தைதான். நாளை மந்திரக் கலைகள் முடிந்ததும் உங்களில் ஒருவருக்கு இந்த வாளைத் தரப் போகிறேன். நாளை சந்திப்போம். இப்போது போய் உங்கள் வேலைகளைக் கவனியுங்கள்'' என்ற தேவநாதன் உள்ளே சென்றுவிட்டார்.

''வா, சூரா! சாப்பிடப் போகலாம். மிகவும் பசிக்கிறது'' என்ற வீரபத்ரன், நண்பனின் தோளில் கை போட்டான்.

ஆனால், சூரபத்ரன் அந்தக் கையை விலக்கினான். ''வேண்டாம் வீரா, இப்போதிலிருந்தே நாம் தனியாக இருக்கப் பழகுவோம்'' என்றான்.

''என்ன சொல்கிறாய்? புரியவில்லை'' என்றான் வீரபத்ரன்.

''நாளையுடன் கல்வி முடிந்து பிரியப்போகிறோம். தவிர, அந்த மந்திர வாளை இருவரில் ஒருவருக்குத்தான் தரப்போகிறார். அதனால், இனியும் நாம் நண்பர்களாக இருக்க முடியுமா என்பது சந்தேகமே'' என்றான் சூரபத்ரன்.

வீரபத்ரன் அதிர்ச்சியுடன் பார்த்தான்.

(தொடரும்)

கவிதைப் பூங்கா

வாழும் வழிகள்!



அன்பு நிறைந்த உலகை
ஆக்கம் கொண்டு படைப்போம்
இன்பம் என்றும் நிலைத்திட
ஈகை குணத்தை வளர்ப்போம்

உண்மை நாளும் உயர்ந்திட
ஊக்கம் பெற்றே உழைப்போம்
எங்கும் பசுமை ஓங்கியே
ஏற்ற வாழ்வை அடைவோம்

ஐயன் சொன்ன அறவழி
ஒற்றி உலகில் வாழ்வோம்
ஓங்கு புகழை நாடிட
ஔவை வழியே நடப்போம்!

பா.பாலசுப்பிரமணியன்

பாலிதீன்!

பாலிதீன் பைகள் வேண்டாமே
பலவிதத் தொல்லைகள்
வருமாமே
மண்ணில் அவைகள் மக்காது
மாறாக நிலைக்கும் அழியாது!

வடிகால் சாக்கடையில்
விழுந்திடும்
வம்பாக நீரை அடைத்திடும்
கொடிய நோய்க்கு வழிதரும்
கொசுக்களைக் கொஞ்சி
அழைத்திடும்!

புரியாத நோயை அளித்திடும்
பொல்லாத செலவைக்
கொடுத்திடும்
பாலிதீன் பைகள் வேண்டாமே
பலவிதத் தொல்லைகள்
வருமாமே!



சின்னை.வெங்கட்ராமன்



சத்தியத்தின் வடிவம்!

வெ.தமிழழகன்

சத்தியத்தின் வடிவமாம்
சாந்தமான புத்தராம்!
புத்தர் என்ற போதிலே
போதி மரம் தோன்றுமாம்!
நித்திலத்தில் தனிமையாய்
நீண்ட தவம் செய்தே
புத்தி ஞானம் பெற்றிட்டார்
புதிய உலகம் கண்டிட்டார்!
ராச வாழ்வை ஒதுக்கியே
எளிமை வாழ்வு வாழ்ந்திட்டார்!
நீசருக்கும் நல் புத்தியை
நித்தம் நித்தம் தந்திட்டார்!

அகிலம் செழிக்க...

கு.ஷ்யாம்

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்
வீதியோரம் மரம் வளர்ப்போம்
நாடும் நிலமும் செழித்திட
நாளும் நாமும் உழைத்திடுவோம்!

மரங்கள் வளர்ந்தால் நிழலாகும்
மக்களுக்கு இனிய குடையாகும்
பழங்கள் பழுத்தே சுவையாகும்
பறவைகள் வந்தே தங்கிடும்!

மழையை மண்ணுக்கு வரவைக்கும்
மக்களின் தாகம் தீரவைக்கும்
நித்தம் மரங்களை வளர்த்திடுவோம்
அகிலம் செழிக்க வைத்திடுவோம்!



அறிவோம் அதிசயம்

அம்ப்ரா (Ambra) என்பது இலத்தீன் மொழிச் சொல். இதற்கு 'நிழல்' என்று பொருள். இதிலிருந்தே அம்ப்ரல்லா தோன்றியது. கிரேக்கர்களும், ரோமானியர்களும் இரண்டாம் நூற்றாண்டிலிருந்து குடையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். இது தோலால் செய்யப்பட்டது. விழாக் காலங்களில் நிழலுக்காகவும், தங்களின் செல்வச் செழிப்பைக் காட்டுவதற்காகவும் பயன்படுத்தினர்.



முதன்முறையாக, சாதாரண மனிதன் குடை பிடித்துச் சென்றான் என்றால் உலகம் எப்படிப் பார்த்திருக்கும்? யார் அவர்?

'அல்வா எங்கே தோன்றியது?' எனக் கேட்டால் திருநெல்வேலி என்பீர்கள்! அல்வாவை முதன்முதலாகத் தயாரித்தவர்கள் பெர்சிய நாட்டைச் சேர்ந்த 'பெர்சியர்கள்'தான். தற்போது ஈரான் என அழைக்கப்படுகிறது.

அல்வா 1,700 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. கோதுமை


குடையாளி!

அவர்தான் 'ஜோனஸ் ஹான்வே' (Joneas Hanway). அன்றாட வாழ்க்கையில் தினந்தோறும் குடையைப் பயன்படுத்தினார். இங்கிலாந்து நாட்டு மக்கள் ஜோனஸ் ஹான்வேயைப் பார்த்துச் சிரித்தனர். ஆனால், அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனென்றால், அக்காலத்தில், (17ஆம் நூற்றாண்டில்) இங்கிலாந்தில் குடைபிடித்தல் என்பது ஆடம்பரத்தின் அடையாளமாகவும், பெண்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடியதாகவும் இருந்தது. வலிமையற்ற ஆண்கள் மட்டுமே குடை பிடித்துச் செல்வர் என்னும் கருத்தும் நிலவியது. ○



முனைவர் ஆசுரா

மாவு, தேன் மற்றும் பழச்சாறு கொண்டு தயாரிக்கப்பட்டது. அது ஈரானில் ‘அப்ரோசாக்’ என அழைக்கப்பட்டது. பெர்சிய (ஈரான்) மன்னர்களின் முதன்மையான இனிப்புப் பண்டமாக விளங்கியது அல்வாதான்! கி.பி.641 ஆம் ஆண்டு அரேபியர்கள் பெர்சியாவைக் கைப்பற்றினர். அவர்களும் ‘அப்ரோசாக்’கை ருசி பார்த்தனர். அவர்கள் வழங்கிய பெயர்தான் ‘ஹுலுவ்’! இதுதான் பின்பு ‘ஹல்வா’ என்று பெயர் பெற்றது. முகமதிய அரசர்களால் ‘ஹல்வா’ இந்தியாவுக்கு வந்தது. திருநெல்வேலியில் அது அல்வா ஆனது! ○



அடடே அல்வா!

‘புளூ டூத்’ என்பது குறிப்பிட்ட தொலைவு செயல்படக் கூடிய கம்பியில்லாத் தகவல் தொடர்பு முறை ஆகும் *(Personal Area Networks)*. புளூ டூத்தின் இயக்கம் 1 மீட்டர், 10 மீட்டர் மற்றும் 100 மீட்டர் என விரிவடைந்து வருகின்றன. இந்தக் கருவிகள் ரேடியோ தகவல் தொடர்புமுறை போன்று இயங்குகின்றன *(Radio communication systems)*.

பொதுவாக நம் நாட்டில், புளூடூத்தின் பயன்பாடு செல்போனில் காண முடியும். செல்போனுக்கும் காதில் வைக்கும் கருவிக்கும் இடையே கம்பியில்லாத் தொடர்பை ஏற்படுத்துகின்றது. படங்கள், காட்சிகள், செய்திகளை புளூடூத் செல்போன்களுக்கிடையே பரிமாறிக் கொள்ள முடியும். கம்ப்யூட்டர், மௌஸ், பிரிண்டர், கீபோர்ட் அனைத்தையும் கம்பியில்லா முறையில் புளூடூத் மூலம் இயங்க வைக்கலாம். மேலை நாடுகளில் இந்த முறை வழக்கத்தில் உள்ளது. ஒரு விளம்பரப் பலகையில் உள்ள விளம்பரங்களை, மற்றொரு விளம்பரப் பலகைக்கு புளூ டூத் மூலம் மாற்றிக் கொள்ளலாம். வழக்கமாக ஒயர்கள் மூலம் இயங்கும் மருத்துவக் கருவிகள், போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சாதனங்



பலே புளூ டூத்!



10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் டென்மார்க் மற்றும் நார்வே நாட்டை ஆண்ட மன்னர், ஹெரால்ட் புளூடூத் *(Harald Blue Tooth)*. அவர் டென்மார்க் மற்றும் நார்வே நாட்டில் போரிட்ட



களையும் புளூ டூத் மூலம் மாற்றி அமைக்க முடியும்.

லாப்டாப், டிஜிட்டல் கேமரா, வீடியோ விளையாட்டுகள் என புளூ டூத்தின் பயன்பாடுகள் நீண்டுகொண்டே செல்கின்றன.

1994 ஆம் ஆண்டு ஜாப் ஹாரிஸன், *(Jaap Haarysen)* மற்றும் சிவான் மாட்டிஸன் *(Sven Mattisson)* ஆகியோர் புளூடூத் தொழில்நுட்பத்தை மேம்படுத்தினர். இந்த புளூடூத் என்னும் பெயர் எப்படி வந்தது தெரியுமா? பூர்வ குடிமக்களை இணைக்கப் பாடு பட்டார். அதே போல 'புளூ டூத்' என்னும் தொழில் நுட்பக் கருவியும் கணிப்பொறி, செல்போன் எனப் பல்வேறு தொழில்நுட்பக் கருவிகளின் இணைப்புப் பாலமாக விளங்குகிறது. எனவே, அந்த மன்னர் நினைவாக இக் கருவிக்கு புளூ டூத் என்னும் பெயரை வைத்தனர்.

வாத்ஸல்யா விருது!



குழந்தைகளுக்காக எழுதும் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் டாக்டர் பூவண்ணன். கோகுலத்தில் இவரது சிறுகதைகள், தொடர்கதைகள் நிறைய வந்து, பாராட்டுகளைப் பெற்றுள்ளன. குழந்தை இலக்கியத்துக்காக பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளார். மும்பையிலுள்ள 'பத்மா பினானி பவுண்டேசன்' என்ற அமைப்பு, அனைத்திந்திய அளவில் சிறந்த குழந்தை எழுத்தாளராக இவரைத் தேர்ந்தெடுத்துள்ளது. 'வாத்ஸல்யா' என்ற விருதையும் ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையையும் ஏப்ரல் 12 ஆம் தேதி வழங்கியுள்ளது.

கோகுலம் சார்பில் இவருக்கு பாராட்டுகளைத் தெரிவிப்போம்!

சுள்ளான் குள்ளான்!

கதை: ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்
தமிழ் வடிவம்:மித்ரா






கள்ளான், உன்கிட்டதான் பணம் இருக்கே. கொடுத்துடறதுதானே...
சீ சீ நான் வாங்கினதை ஒருபோதும் திருப்பித் தர்றதில்ல.
அந்த அப்துல்லா எல்லார் முன்னாலயும் என்னை அவமானப்படுத்திட்டான். அவனுக்குப் பாடம் புகட்டணும்.
அப்போது-
நீங்க கள்ளான் தானே?
ஆமா!
நான் குள்ளான். அடுத்த கிராமத்துல இருக்கற உங்க மாமா, உங்களைப் பற்றி சொன்னார்.
எனக்கு ஒரு வேலையை, நீங்க ஏற்பாடு செய்து தர முடியுமா?
வேலை? நானா?


அப்துல்லாவுக்கு பதிலடி கொடுக்க சரியான ஆள். இவனை வெச்சு அவனை கவனிப்போம். அப்புறம் இவனுக்கும் 'டாடா' காட்டுவோம்!
எனக்காக ஒரு ஆளை லெஃப்ட் அண்ட் ரைட் அடிச்சு வெளுக்கணும். செய்யறியா?
ஆல்ரைட்!
நான் அவனைச் சண்டைக்குக் கூப்பிடுவேன், நீ அவன் மேல் பாய்ஞ்சு, உன்னோட வேலைய ஆரம்பிக்கணும்.
சரிங்க!
அடேய் அப்துல்லா இன்னிக்கு தொலைஞ்சே நீ!
ஹேய... அப்துல்லா! அப்படியே நில்!
அய்யோ! இவனா?
?
நான் உனக்குப் பணத்தைத் தரலைன்னா, என்ன பண்ணுவே? உனக்குத் தைரியம் இருந்தா பக்கத்துல வா!


என்னடா சொன்னே?
ஆ! அம்மா!
ஓ!
தயவுசெஞ்சு விட்டுடு, போதும்! இந்தா, உன்னோட பணம்.
அப்படி வா வழிக்கு!
ஏண்டா தடியா? அவனை அடிக்கதானே உன்னை அழைச்சுட்டு வந்தேன்?
ஆனா... ஆனா... நான் அவனை அடிக்க முடியாது.
உனக்கு வேலை வேணும்னா, போய் அவனை அடி.
முடியாதுங்க! ஒருமுறை உங்க மாமாவுக்காக, அவனை அடிக்கப் போனேன்...
அப்ப அவன் கொடுத்த பரிசு இன்னும் இருக்கு பாருங்க!


கோகுலம்
எக்ஸ்பிரஸ்
அறிவோடு விளையாடு!
தொகுப்பு: ராஜ்
அறிவுக்கும் கற்பனைக்கும் சவால் விடும் 20 விளையாட்டுகள்!

அன்பு நண்பர்களே...



'கோகுலம் எக்ஸ்பிரஸ்' இந்த மாதமும் உங்களை வரவேற்கிறது. உள்ளே விதவிதமான விளையாட்டுகள், பல்சுவை புதிர்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. உங்கள் கோடை விடுமுறையைப் பயனுள்ள வகையில் செலவழிக்க இது நிச்சயம் உதவும்!

இந்தப் பகுதிக்கு நாங்களும் எழுதலாமா? என்ன எழுதலாம்? எப்படி எழுத வேண்டுமென நிறைய பேர் கடிதம் எழுதி கேட்டுள்ளீர்கள். அடுத்த மாதம் முதல் இந்த முப்பத்து இரண்டு பக்கங்களும் உங்களுடையது தான். ஆகவே தாராளமாக எழுதுங்கள். குட்டிக் கதை, கவிதை, சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த மறக்க முடியாத சம்பவம், அறிவியல் செய்திகள், புதிர்கள்... இப்படி அனைத்தையும் அனுப்பலாம். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் - கோகுலம்,
(எக்ஸ்பிரஸ் பகுதி)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

அன்புடன்
ஆசிரியர்






கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புங்கள்!

இடமிருந்து வலம்:

1. உணவு - வேறு பெயர்.
2. ஐஸ்கிரீம் வகைகளில் ஒன்று.
5. சிறுவர்கள் விரட்டிப் பிடிக்கும் பூச்சி.



6. ராஜாவின் மனைவி.
14. குளிர்ச்சியான காய், அப்படியே கடித்துச் சாப்பிடலாம்.
15. கோடையில் பருக, ஆரோக்ய மான பானம்.

வலமிருந்து இடம்:

4. தினம் ஒரு ________ சாப்பிடு வது உடலுக்கு நல்லது.
7. கோயில் என்றால் இதுவும் உண்டு.
9. மீனைப் பிடிக்கும் பறவை.
10. சுவரில் அடிக்க லாம்.
12. இரவுக்கு எதிர்ப் பதம்.
13. ஒரு கறுப்பு மிருகம்.

மேலிருந்து கீழ்:

1. சில மிருகங்களை இதனால் அடிப்பார்கள்.
2. வாசலில் அம்மா போடுவது.
5. ஆடை - வேறு பெயர்.
7. முனிவர்கள் வசித்த குடிசையை இப்படியும் சொல்வதுண்டு.
11. ஒரு கேரள நடனம்.
13. காந்தி அணிந்த ஆடை.

கீழிருந்து மேல்:

3. பறவைகள் கட்டுவது.
9. அமெரிக்காவைக் கண்டுபிடித் தவர்.
12. வேலை - இன்னொரு பெயர்.
15. விடியலில் இலைகள் மீது காண லாம்.

விடை பக்கம்: **55**





எங்கே அவர்கள்??




உங்கள் திறமைக்கு ஒரு சவால். உங்கள் ஊரில் நடந்த திரு விழாவில் நீங்களும் 'என்சிசி' சார்பில் பாது காப்பு பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். அந்தக் கூட்டத்தில் பத்துப் பேரைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது. அவர்களைப் பற்றிய குறிப்புகளும் தரப்படு கிறது. குறிப்புகளைக் கொண்டு கூட்டத்தில் அவர் களைக் கண்டுபிடித்து வட்டமிடுங்கள் பார்க்கலாம்!

குறிப்புகள்:

1. சேலம் என்றதும் நினைவுக்கு வரும் 'பழம்' இவர் கையிலே...
2. 'குழல்' ஊதும் கடவுள் வேடம் போட்டவரே! எங்கே போனீர்?
3. குட்டிப் பையனோடு பந்து வாங்குபவர் எங்கே?
4. பணத்தை எடுக்கிறான், பட்டுன்னு பிடி!
5. கைத் தடியைத் தவறவிட்டே எடுப்பவர் யார்?
6. கையிலே பலூன், காலருகே அபாயம்! தடுத்து நிறுத்து.
7. திருவிழாவுக்கு வந்த தேசம் தாண்டிய ஜோடி!
8. அப்பாவின் தோளிலே அட்டகாச சிரிப்பு!
9. நடமாடும் இடத்தில் உட்கார்ந்தவரை எழுப்பு!
10. கையிலே அர்ச்சனை கூடை; தலையிலே பூ! யார் அவர்?

விடைகள்: பக்கம் 54





இங்குள்ள கட்டங்களில் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், சுற்றுலாவுக்குப் புகழ் பெற்ற சில ஊர்கள், நாடுகளின் பெயர்கள் உள்ளன. அவற்றைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

விடை பக்கம் 54




நாடும் ஊரும்!

கொ	டை	க்	கா	ன	ல்	டி	ட்	ஊ
க	ஏ	ற்	கா	டு	லா	ம்	சி	கா
ன்	மை	ல்	க	க்	ன	கே	ஒ	ஷ்
னி	கு	கா	ஞ்	சி	பு	ர	ம்	மீ
யா	ர்	ம	லே	சி	யா	ணா	சீ	ர்
க்	மா	ம	ல்	ல	பு	ர	ம்	*
கு	ஜ	ப்	பா	ன்	ங்	கா	ங்	ஹா
ம	ன்	மா	த	ந்	அ	மூ	ணா	று
ரி	க	வி	ட்	ச	ர்	லா	ந்	து




பார்ப்பது எதை?




சோமு ஆச்சர்யத்துடன் பார்ப்பதை எதை?


1 முதல் 25 வரையிலான புள்ளிகளை இணைத்தால் தெரியும்!







இங்குள்ள மூன்று படங்களிலிருந்து மூன்று துண்டுகள் தனியே உள்ளன. அவற்றை வெட்டியெடுத்து பொருத்தமான துண்டை சரியான இடத்தில் ஒட்டுங்கள் பார்க்கலாம்!







வெட்டுங்கள்!

ஒட்டுங்கள்!






சுற்றுலாவுக்கு வந்த விமலா, சுற்றி பார்க்கையில் தான் வந்த பேருந்தை விட்டு நீண்ட தூரம் போய் விட்டாள். அவள் மீண்டும் பேருந்தை அடைய வழிகாட்டி உதவுங்கள்!

பேருந்தை அடைய...







ஹலோ குட்டீஸ்! புகழ்பெற்ற 'சுடோகு' விளையாட்டுக்கு ரெடியா? 1 முதல் 9 வரையிலான எண்களைப் பயன்படுத்தி காலியான கட்டங்களை நிரப்புங்கள். இடமிருந்து வலம், மேலிருந்து கீழ், ஒரு வரிசையில் வந்த எண் மீண்டும் வரக்கூடாது. எந்தப் பக்கம் கூட்டினாலும் கூட்டுத்தொகை 45 வர வேண்டும். ரெடி ஜூட்! முடிவை அறிய விடைகள் பக்கம் பாருங்கள்!



‘எண்’ணோடு விளையாடு!



			2	4		9	8	
							3	
		8		7	3	4		
				8		7		1
3								6
9		1		2				
		9	8	3		2		
	7							
	2	5		9	1			



ஜோடி சேருங்கள்!

ஹலோ குட்டீஸ்! இங்கே மொத்தம் பன்னிரண்டு படங்கள் உள்ளன. அவற்றைக் கத்தரித்து, எடுத்துக் கொள்ளுங்கள். சற்றே தடிமனான அட்டையில், படத்தின் அளவுக்கு பன்னிரண்டு துண்டுகளைக் கத்தரித்து, ஒவ்வொரு அட்டையிலும் ஒரு படத்தை ஒட்டுங்கள். அட்டைகள் வித்தியாசம் இல்லாமல் இருக்கட்டும்.

இது நான்கு பேர் விளையாடும் விளையாட்டு! சீட்டுக் கட்டுகளைப் போல் பன்னிரண்டு துண்டுகளையும் குலுக்கி, ஆளுக்கு ஒன்றாக எல்லாத் துண்டுகளும் முடியும் வரை பிரித்துத் தரவும். குலுக்கும்போதும், பிரித்துத் தரும் போதும் படங்கள் தெரியக்கூடாது. பின் பகுதிதான் தெரிய வேண்டும்.

இப்போது ஒவ்வொருவரிடமும் மூன்று துண்டுகள் இருக்கும். மூன்று படங்களும் ஒரே மாதிரி உள்ளதா (அதாவது 'சிங்கம்' என்றால் மூன்று சிங்கங்கள்) என்று பாருங்கள். இல்லையெனில் முதல் நபர் அடுத்தவரிடம் ஒரு சீட்டைக் கொடுக்கவும். அந்த இரண்டாவது நபர், மூன்றாவது நபரிடம் ஒரு சீட்டைக் கொடுப்பார்.

தங்களுக்கு பொருத்தமான மூன்று படங்களும் வரும்வரையில் இப்படி மாற்றி மாற்றித் தரவும். யாருக்கு முதலில் படங்கள் பொருந்துகிறதோ அவர் 'வின்' என்றபடி கையைத் தூக்க வேண்டும். அவருக்கு பத்து மதிப்பெண்கள்.

பிறகு மீண்டும் சீட்டுகளை நன்கு குலுக்கி, முன்புபோல் பிரித்து அளித்து ஜோடி சேர்க்க வேண்டும். இப்படியே நீங்கள் விரும்பும் வரை விளையாடிவிட்டு மதிப்பெண்களைக் கூட்டுங்கள். யாருக்கு அதிகம் வருகிறதோ, அவரே வெற்றி பெற்றவர். சிலசமயம் ஒருவருக்கு ஜோடி சேர்ந்த அதே நேரம் இன்னொருவருக்கும் ஜோடி சேரலாம்.
















அது போன்ற சமயத்தில் முதலில் 'வின்' என்று கூறி கையை உயர்த்துகிறவருக்கே மதிப்பெண்.

சீட்டுகளைப் பிரித்துத் தந்ததுமே ஒருவருக்கு மூன்று படங்களும் ஒரே மாதிரி அமைந்துவிட்டால் அவருக்கு பதினைந்து மதிப்பெண்.

இந்த விளையாட்டு சிறந்த பொழுது போக்காக உங்களுக்கு அமையும். ஜாலியாக விளையாடுங்கள்!

யானைக் குட்டி... மான் குட்டி...

வண்ணம் தீட்டுங்கள்



இங்குள்ள படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்க குட்டீஸ்!


இரண்டு படங்களுக்கிடையே எத்தனை வித்தியாசங்கள் உள்ளனவென்று கண்டு பிடியுங்கள்! விடைக்கு பார்க்க பக்கம் 55.



எத்தனை வித்தியாசங்கள்?







ஜாலி ரேஸ்

மலைப் பிரதேசத்துக்கு நீங்களும் நண்பரும் டூருக்கு வந்திருக்கிறீர்கள். இருவரும் சைக்கிள் ரேஸில் கலந்துகொள்கிறீர்கள். மலை உச்சியை முதலில் அடைந்து ஜெயிக்கப் போவது யார்?

நீங்கள் செய்யவேண்டியது இதுதான். ஒரு வெள்ளைக் காகிதத்தை ஒரே அளவிலான நான்கு துண்டுகளாகக் கத்திரித்து, அவற்றில் ஒன்று, இரண்டு என நான்கு வரை எழுதி, மடித்துக் கொள்ளுங்கள். குலுக்கி போட்டு ஒரு சீட்டு எடுங்கள். வருகிற எண்கள்படி உங்கள் காய்களை நகர்த்துங்கள். அந்தந்த கட்டங்களுக்கேற்ற விதி களைப் பின்பற்றுங்கள். ரெடி ஜூட்!





14
13
12
11
10
9
8
7
6
5
3. மரம் குறுக்கே விழுந்துள்ளது.
மீண்டும் முதல் கட்டம் செல்!
5. எதிரே பஸ். ஒரு ஆட்டம் நில்!
6. சரிவான பாதை. அடுத்த 7ஆம்
கட்டத்துக்கு ஜம்ப்!
9. ஐயோ மலைப்பாம்பு! 8ஆம்
கட்டத்துக்கு ஓடு!
10. சரிவான பாதை. அடுத்த
கட்டத்துக்கு ஜம்ப்!
13. பாதையில் பாறை. இரண்டு
கட்டம் நில்!
15. அடடா, சைக்கிள் பஞ்சர். முதல்
கட்டம் செல்!
16. சரிவுப் பாதை(17)க்கு போ!



என்ன இது? என்ன இது?

உங்களுக்கு
நன்கு தெரிந்த
நான்கு பொருட்களின்
ஒரு பகுதி மட்டும்
இங்கே உள்ளன. உற்று கவனித்து
அவை என்னவெனக்
கண்டுபிடியுங்கள்!


விடை: பக்கம் 55



பொருந்தாதது எது?

A















B







இங்குள்ள மூன்று வரிசைகளிலும் தலா மூன்று படங்கள் உள்ளன. ஒவ்வொரு வரிசையிலும் ஒரு படம் மற்ற படங்களிலிருந்து மாறுபட்டுள்ளது. அதனைக் கண்டுபிடியுங்கள்!

விடை பக்கம்: 55



இங்கே விளையாட்டு சம்பந்தமான பத்து கேள்விகளும் இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையை டிக் (✓) அடியுங்கள். விடைகள் பக்கம் 54.

1. ஐ.பி.எல். 20-20 போட்டியில் பங்கேற்கும் சென்னை அணியின் பெயர் என்ன?

அ. சென்னை சூப்பர் லயன் ☐ ஆ. சென்னை சூப்பர் கிங்ஸ் ☐

2. ஐ.பி.எல். சென்னை அணியை ஏலத்துக்கு எடுத்துள்ள நிறுவனம் எது?

அ. இந்தியா சிமெண்ட்ஸ் ☐ ஆ. டால்மியா சிமெண்ட்ஸ் ☐

3. ஒலிம்பிக் தகுதிச் சுற்று போட்டியில் இந்திய ஹாக்கி அணியை வீழ்த்திய நாடு எது?

அ. ஹாலந்து ☐ ஆ. இங்கிலாந்து ☐

4. இந்திய ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் யார்?

அ. கே.பி.எஸ்.கில் ☐ ஆ. அஸ்லம் ஷேர்கான் ☐

5. இளம் வேகப்பந்து வீச்சாளர் பிரவீன்குமார் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

அ. உத்திரபிரதேசம் ☐ ஆ. மத்திய பிரதேசம் ☐


6. 'ஆசிய கிரிக்கெட் கோப்பை' போட்டி ஜூன் மாதத்தில் எங்கு நடைபெறுகிறது?

அ. பாகிஸ்தான் ☐ ஆ. இலங்கை ☐

7. ஐ.பி.எல். ஏலத்தில் டோனிக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

அ. ஐந்து கோடி ☐ ஆ. ஆறு கோடி ☐

பார்த்து படி...





8. இந்த ஆண்டு 'ஒலிம்பிக்' நடைபெறப் போகும் இடம் எது?

அ. பெல்ஜியம் ☐ ஆ. பெய்ஜிங் ☐

9. மலேசியாவில் நடந்த கோல்ஃப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

அ. பீட்டர் ஹெட் பிளோம் ☐ ஆ. அர்ஜுன் அத்வால் ☐

10. நியூசிலாந்துக்கு எதிரான சமீபத்திய டெஸ்ட் போட்டியில் 'ஹாட்ரிக்' சாதனை புரிந்த 'சைடுபாட்டம்' எந்த நாட்டுக்காரர்?

அ. இங்கிலாந்து ☐ ஆ. தென் ஆப்பிரிக்கா ☐

'டிக்' அடி!



* பிரவீன்குமார்





வரைந்து






சிறிய படத்தைப் பார்த்து பெரிய படத்தை முழுமையாக வரைந்து, வண்ணம் தீட்டுங்கள்!

பாருங்கள்!

ஹலோ குட்டீஸ்! இங்கே பாதி படம் உள்ளது.
மீதி படத்தை வரையுங்கள்!





a



b

தவறுகள் என்ன?



c

இந்த நான்கு
படங்களிலும் சிறுசிறு தவறுகள்
உள்ளன. என்னவென
கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!


விடை பக்கம் : 54

d






1



2



யார் இவர்கள்?

3



இங்குள்ள
நிழல்களைப் பார்த்து
இவர்கள் யார்
என்பதை
கண்டுபிடியுங்கள்!

விடை பக்கம் 55

சொல் விளையாட்டு




இது உங்கள் மொழித் திறனை வளர்க்கும் விளையாட்டு! இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் விளையாடலாம். ஒரு குச்சி, சேஃப்டி பின், காகிதம் போதும்.

எதிரே உள்ள பெரிய வட்டத்தைப் பாருங்கள். அது பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் ஓர் எழுத்து உள்ளது. நடுவில் ஒரு சிறிய வட்டம் உள்ளது. இங்குள்ள விளக்கப் படத்தில் இருப்பதைப்போல், 'சேஃப்டி பின்'னை சிறிய வட்டத்தில் பொருத்திக் கொண்டு, குச்சியை வட்டத்தின் மையத்தில் 'பின்'னிலுள்ள ஓட்டைக்குள் நிற்க வைத்து இடது கை ஆட்காட்டி விரலால் அழுத்திக் கொள்ளுங்கள். வலது கையின் ஆட்காட்டி விரல் மற்றும் கட்டை விரலைக் குவித்து 'சேஃப்டி பின்'னைச் சுண்டி விடுங்கள். சேஃப்டி பின் சுழன்று எந்த எழுத்தில் நிற்கிறதோ அந்த எழுத்தை ஆரம்பமாகக் கொண்டு சில சொற்களைத் தாளில் எழுதிக்கொள்ள வேண்டும்.



உதாரணமாக 'அ' என்ற எழுத்தில் நின்றால், அணில், அம்மா, அப்பா என்று எழுதலாம். அவகாசம் சரியாக ஒரு நிமிடம்தான்! அதற்குள் எவ்வளவு சொற்களை எழுத முடிகிறதோ அவ்வளவு சொற்களையும் எழுதவும். பிறகு அடுத்தவர் சுற்றிவிட்டு எழுத வேண்டும். ஒருவருக்கு வந்த எழுத்தே அடுத்தவருக்கு வரலாம். ஆனால் ஒரே நபருக்கு வந்த எழுத்து மீண்டும் வந்தால் அவர் மறுபடி சுழலவிட்டு வேறு எழுத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்படி எட்டு எழுத்துகளும் ஒருவருக்கு வரும்வரை விளையாட வேண்டும். யாரேனும் ஒருவருக்கு முதலில் எட்டு எழுத்துகளும் வந்துவிட்டால் அத்துடன் ஆட்டம் முடிகிறது. பிறகு எழுதிய ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு மதிப்பெண் போடுங்கள். அநேகமாக எட்டு எழுத்துகள் வரப்பெற்றவரே அதிக மதிப்பெண் எடுப்பார்.




சுற்றுங்கள்...



சொல்லுங்கள்...!

ஒருவேளை அவர் குறைவான சொற்களை எழுதி இருந்தால் அடுத்தவர் வெற்றி பெறுவார். ஒவ்வொருவரும் தனித்தனித் தாளை வைத்துக்கொள்ளுங்கள். ஒருவர் எழுதியதை இன்னொருவர் பார்க்கக் கூடாது! நீங்கள் எழுதும் சொல் தமிழ்ச் சொல்லாக இருக்க வேண்டும். ஆங்கில வார்த்தைகளாகவோ, முழுமை பெறாத வார்த்தைகளாகவோ இருந்தால் அதற்கு மதிப்பெண் கிடையாது. புதுப் புதுச் சொற்களை அறிய இது உதவும். விளையாடுங்கள்!







என்னைப் போல யாரு?

இங்கேயுள்ள நான்கு பேருமே என்னை மாதிரி இருந்தாலும் மூன்று பேரிடம் சின்னச் சின்ன மாற்றங்கள் இருக்கு. அப்படியே என்னை மாதிரி இருக்கிறது யாருன்னு கண்டுபிடியுங்க!



எத்தனை? எத்தனை?

இங்குள்ள படத்தில் நிறைய பந்துகள் உள்ளன. எந்தெந்த நிறத்தில் எத்தனை பந்துகள் உள்ளனவென கண்டுபிடியுங்கள்!

விடை: பக்கம் 55





விடைகள்

வார்த்தை விளையாட்டு:

கொ	டை	க்	கா	ன	ல்	டி	ட்	ஊ
க	ஏ	ற்	கா	டு	லா	ம்	சி	கா
ன்	மை	ல்	க	க்	ன	கே	ஒ	ஷ்
னி	கு	கா	ஞ்	சி	பு	ர	ம்	மீ
யா	ச்	ம	லே	சி	யா	னா	சீ	ர்
க்	மா	ம	ல்	ல	பு	ர	ம்	*
கு	ஜ	ப்	பா	ன்	ங்	கா	ங்	ஹா
ம	ன்	மா	த	ந்	அ	மூ	ணா	று
ரி	ஸ்	வி	ட்	ச	ர்	லா	ந்	து

தவறுகள் என்ன?

a. சிறுவன் கையில் இருப்பது கிரிக்கெட் மட்டையல்ல!

b. குரங்குக் கூண்டின் மேல் பகுதி மூடாமல் உள்ளது.

c. காலில் ஷூ, ஷாக்ஸ் அணிந்து நீச்சல் குளத்தில் குதிக்கிறான்.

d. வண்டியின் சக்கரங்கள் சதுரமாக உள்ளன.


பொருந்தாதது எது?

a. யானை (தாவர உண்ணி)

b. ஆந்தை (இரவுப் பறவை)

c. ஹெலிகாப்டர் (வானில் பறப்பது)

எங்கே அவர்கள்?



பார்த்து படி... 'டிக்' அடி!


1. ஆ, 2. அ, 3.ஆ, 4.அ, 5.அ
6. அ, 7.ஆ, 8.ஆ, 9.ஆ, 10.அ

என்னைப் போல யாரு?

படம் எண்: 2

'எண்' ணோடு விளையாடு!

1	3	6	2	4	5	9	8	7
7	5	4	9	6	8	1	3	2
2	9	8	1	7	3	4	6	5
5	6	2	3	8	4	7	9	1
3	4	7	5	1	9	8	2	6
9	8	1	7	2	6	5	4	3
6	1	9	8	3	7	2	5	4
8	7	3	4	5	2	6	1	9
4	2	5	6	9	1	3	7	8



என்ன இது? என்ன இது?

பக்கம்

எத்தனை வித்தியாசங்கள்?

1. பலூனின் நிறம்
2. கூடார துணி
3. கூடாரத்தைப் பொருத்தியுள்ள ஆணிகள்
4. மரக்கிளை
5. சிறுமியின் சட்டை டிசைன்

யார் இவர்கள்?

1. மகாத்மா காந்தி
2. புத்தர்
3. விவேகானந்தர்

எத்தனை? எத்தனை?

- சிகப்பு: 39
- வெள்ளை: 10
- மஞ்சள்: 3
- மஞ்சளும் வெள்ளையும் கலந்த நிறம்:1

குறுக்கெழுத்துப் புதிர்

[1] சா	ப்	பா	டு	■	[2] கோ	ன்	ஐ	ஸ்
ட்	■	■	[3] கூ	■	ல	■	■	ப
டை	ட்	[4] மூ	■	[5] து	ம்	பி	■	ம்
■	■	■	[6] ரா	ணி	■	ல்	■	ல
ம்	ள	[7] கு	■	■	■	[8] கு	க்	[9] கொ
ச	■	டி	■	ணி	[10] ஆ	■	■	■
ச்	■	ல்	[11] க	[12] ப	■	டி	ச	[13] க
ளி	■	■	ள	■	ளி	■	■	த
[14] வெ	ள்	ள	ரி	■	[15] ப	த	நீ	ர்


அடுத்த கோகுலம்
எக்ஸ்பிரஸ்...
வாசகர்களின்
பங்களிப்பு
படைப்புகள்...
பக்கத்துக்குப்
பக்கம்
கொண்டாட்டம்!
வாசகர்
பூங்கா
இப்பவே கடைக்காரரிடம் சொல்லி வெச்சுடுங்க!



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-N.P, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


சிறுகதை
மயில்

என்.கோதண்டராமன்

போட்டி சவால்!

அந்தி மயங்கும் வேளை.

குளிர் காற்று சில்லென்று வீச, வானம் மேக மூட்டமாக இருந்தது. எந்த நேரமும் மழை வரும் சூழல். பச்சை மலைக் காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் சந்தோஷத்தில் கும்மாளம் போட்டன.

மரத்தின் மீது அமர்ந்திருந்த மயில், கீழே இறங்கி வந்து தன் தோகையை விரித்து தெம்பாக நடனம் ஆடத் தொடங்கியது.

மயிலின் ஆட்டத்தைக் காண அனைத்து மிருகங்களும் ஓடி வந்தன. பறவைகளெல்லாம் மரத்தின் கிளைகளில் அமர்ந்து தங்கள் இறக்கைகளை படபடவென அடித்து மயிலுக்கு மகிழ்ச்சியை தெரிவித்தன. குள்ள நரியார் மயிலைச் சுற்றி ஓடி வர, கரடியாரோ சந்தோஷ மிகுதியில் தன் கையினால் தாளம் போட ஆரம்பித்தது.

அப்போது மயில் தன் ஆட்டத்தை திடீரென நிறுத்தியது. தலையை இப்படியும் அப்படியும் திருப்பி எல்லா மிருகங்களையும் ஒரு அகங்காரப் பார்வை பார்த்தது. பிறகு "சிங்க ராஜாவே நான் இதுவரை ஆடிய நடனத்தைப் பார்த்து எல்லாரும் சந்தோஷத்துடன் கை தட்டினீர்கள். இனி நான் தனியாக ஆட விரும்பவில்லை. யாராவது என்னோடு போட்டி போடத் தயாரா?" என சவால் விட்டது.

அனைத்து மிருகங்களும் திகைத்தன. 'மயிலுக்குத்தானே தோகை உள்ளது. நாம் எப்படி அதனுடன் போட்டி நடனம் ஆட முடியும்?' என்று ஒன்றின் முகத்தை மற்றொன்று பார்க்க ஆரம்பித்தன.

மயிலுக்கோ ஆணவம் அதிகமானது. "சிங்கராஜா யாரையாவது என்னுடன் போட்டிக்கு ஆடச் சொல்லுங்கள். அப்படி இல்லையெனில் நீங்கள் ராஜா பதவியிலிருந்து இறங்கிவிட்டு அந்தப் பதவியை என்னிடம் ஒப்படையுங்கள்" என்றது.

நடப்பது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த குயில், மயிலுக்கு எதிரில் வந்து நின்றது.

குயிலைப் பார்த்த மயில், "என்ன குயிலாரே நீதான் எனக்குப் போட்டியாக ஆடப் போகிறாயோ... தோகை எங்கே மரத்திலேயே மறந்து வைத்துவிட்டு வந்து விட்டாயே?" என கேலி செய்து சிரித்தது.

குயிலோ பொறுமையாக "மயிலே, ஆணவத்தில் அதிகமாகப் பேசாதே! நான் உன்னோடு போட்டி நடனம் ஆடப் போவதில்லை. ஆனால் என் பாட்டுக்கு நீ ஆடி ஜெயித்துவிட்டால் சிங்கராஜவிடம் சொல்லி அந்தப் பதவியை நான் உனக்கே வாங்கித் தருகிறேன். என்ன சரியா?" என்று கேட்டது.

எல்லா மிருகங்களும் "அதுதான் சரி! குயிலின் பாட்டுக்கு நீ நடனம் ஆட வேண்டும்" என்று சத்தம் போட்டன.

சிங்கமும் "மயிலே, நீ குயிலின் பாட்டுக்கு நடனம் ஆடி ஜெயித்துவிட்டால் இந்தக் காட்டின் ராஜா பதவியை கொடுத்துவிடுகிறேன்" என்றது.

'இந்த குயில் என்ன பாடி கிழித்து விடப் போகிறது. அதையும்தான் பார்க்கலாம்'



என்ற எண்ணத்துடன் போட்டிக்கு ஒப்புக்கொண்டது மயில்.

குயில் பாட, மயில் நடனம் ஆட ஆரம்பித்தது. குயிலின் பாடலை அனைத்து மிருகங்களும் தங்களை மறந்து கண்களை மூடி ரசிக்க ஆரம் பித்தன. குயிலின் குரல் மட்டுமே அங்கே ஒலித்தது. மற்றபடி காடே நிசம் பதமாய் இருந்தது.

மயிலோ தோகையை விரித்து வேக வேகமாக பறந்து, குதித்து, தாவி, ஓடி யென ஆட்டம் போட்டது. நேரமாக நேரமாக உடலில் அசதி ஏற்பட்டது. தனது பார்வையை நடனமாடியபடியே மற்ற மிருகங்களை நோக்கி திருப்ப, எல்லா மிருகங்களும் கண்களை மூடிய படி குயிலின் பாடலில் தங்கள் மனத் தைப் பறிகொடுத்து ரசித்துக் கேட்பதைப் பார்த்தது. தன் ஆட்டத்தை எந்த மிரு கமும் பார்க்கத் தயாராயில்லை என் பதை புரிந்துகொண்டு அவமானப்பட்டு, ஒரு மூலையில் போய் அமர்ந்தது. குயில்பாடி முடிக்க, காட்டை இருள் சூழ ஆரம்பித்தது.

அனைத்து மிருகங்களும் சுய நினைவுக்கு வந்து, குயிலை மனதாரப் பாராட்டிவிட்டு, மயில் எங்கே என்று தேடின. மயில் போன இடம் தெரியவில்லை.

இன்றுவரை காட்டிலுள்ள மிருகங் களும் மற்ற மயில்களும் அந்த ஆண வம் பிடித்த மயிலை தேடிக் கொண் டிருக்கின்றன!

விடையைச் சொல்: பரிசை வெல் - 9ல் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடை களை எழுதியிருந்தீர்கள். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. 2.7 சதவிகிதம், 2. இராயவரம் சுப்பிரமணியன் பாலிடெக்னிக், 3. டிரைடன் 4. பாம்பு, 5. பால் பிஸினஸ்

பரிசு பெறுவோர்:

1. டி.யோகலெட்சுமி - காரைக்கால்
2. ஆர்.கிருஷ்ணகுமார்- சென்னை
3. ஸ்ரீவித்யா - கோவை
4. சு.ஆனந்த் - மதுரை
5. டி.தாரிணி-கும்பகோணம்
6. ஆர்.சரண்யா - சேலம்
7. தே.சேதுபதி - திட்டக்குடி
8. வே.பத்மா - திருச்செந்தூர்
9. ஏ.ஹம்சத் தவ்ஹா - கீழக்கரை
10. நா. யோகன் - இருதயபுரம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!



கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்

'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது.
இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

451) எஸ்.விக்னேஷ், எட்டாம் வகுப்பு, கேந்த்ரிய வித்யாலயா, சென்னை.
452) சு.மதிவாணன், 9ஆம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி,நம்பியூர்.
453) ஆர்.காயத்ரி, 10ஆம் வகுப்பு, காமராஜ் பதின்ம.மே.நி.பள்ளி, கோவில்பட்டி.
454) கே.விக்னேஷ், ஏழாம் வகுப்பு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி, திருவள்ளூர்.
455) எஸ்.திரிபுரசுந்தரி, மூன்றாம் வகுப்பு, பாரதி வித்யாலயா நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி, திருக்கழுக்குன்றம்.
456) ப.சர்வேஸ்வரன், இரண்டாம் வகுப்பு, ஹோலி ஏஞ்சல் நர்சரி பிரைமரி பள்ளி, மதுரை.
457) ர.மீனாகோமதி, பத்தாம் வகுப்பு, மகாத்மா மெட்ரிக் பள்ளி, மதுரை.
458) அ.அ.இளம்பரிதி, எட்டாம் வகுப்பு, ஸ்ரீ ஞானாந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருக்கோவிலூர்.
459) ஞா.த.ரம்யா, 7ஆம் வகுப்பு, தா.ஆ.வே.பெல் பள்ளி இராணிப்பேட்டை.
460) வெ.நவின்ராஜா, 9ஆம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்.
461) எஸ்.காயத்ரி, எட்டாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை.
462) கி.இராதாகிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, வாசுதேவநல்லூர்.
463) பி.பாண்டியன், ஐந்தாம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி.பள்ளி, திரவந்தவார்.
464) வி.சி.ஷாமிலிஸ்ரீ, ஒன்பதாம் வகுப்பு, கோயன்கா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
465) பா.தர்மசீலன், ஐந்தாம் வகுப்பு, தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருத்துறைப்பூண்டி.
466) ஆர்.ஸ்ரீவித்யா, ஐந்தாம் வகுப்பு, ருக்மணி கண்ணன் வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, கோவை.
467) பா.கணேசன், ஏழாம் வகுப்பு, முத்தாலம்மன் இந்து உயர்நிலைப் பள்ளி, வ.புதுப்பட்டி
468) தி.அருணாச்சலம், ஆறாம் வகுப்பு, தி லீடர்ஸ் மெட்ரிக் பள்ளி, காரைக்குடி



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

புகைப்படம்

: ....

வீட்டு முகவரி : ....

....

....

நான் 'கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

469) க.சிவப்பிரியா, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீவிக்னேஷ் வித்யாலயா, கூத்தூர்.
470) ஆர்.மணிகண்டன், பத்தாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, இளம்பிள்ளை.
471) ச.பிரியதர்ஷினி, ஏழாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கூடக்கரை.
472) எஸ்.தினேஷ், பத்தாம் வகுப்பு, ஸ்ரீவெங்கடேஷ்வரா மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்.
473) ஜெ.அருண் பாலாஜி, ஆறாம் வகுப்பு, சிஷ்யா மெட்ரிக் பள்ளி, திருவண்ணாமலை.
474) ச.மீனாட்சி சுந்தரம், ஆறாம் வகுப்பு, செவன்த்டே ஹையர் செகண்டரி பள்ளி, மதுரை.
475) வீ.தீனதயாளன், முதலாம் வகுப்பு, ஞானாம்பிகா உதவி தொடக்கப் பள்ளி, கருப்பம்புலம்.
476) ர.கீர்த்தனா, மூன்றாம் வகுப்பு, வேல்ஸ்



வித்யாஷ்ரம், சென்னை.
477) சு.ஆனந்த், ஒன்பதாம் வகுப்பு, பி.கே.என்.பள்ளி, பசுமலை.
478) ரா.கார்த்திகேயன், ஏழாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி மேல்நிலைப் பள்ளி, கோவை.
479) ஆர்.காஞ்சனா, பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, சென்னை.
480) ஜி. ரங்கராஜன், நான்காம் வகுப்பு, ஸ்ரீ சங்கரா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
481) பி.மாணிக்கவாசகன், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயந்திர மெட்ரிக் பள்ளி, மகராஜநகர் போஸ்ட்.
482) ஆர்.விஷ்ணுப்பிரியா, பதினொராம் வகுப்பு, ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை.
483) என்.ஸ்ரீராம், ஐந்தாம் வகுப்பு, பால வித்யா மந்திர், சென்னை.
484) எஸ்.பிரியதர்ஷினி, 10ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, அம்பல்.
485) ச.அசாருதீன், பத்தாம் வகுப்பு, தூய வளனார் கல்லூரி மேல்நிலைப் பள்ளி, திருச்சி.
486) மஹே சூரியா, 7ஆம் வகுப்பு, ஸ்ரீ லதாங்கி வித்யாமந்திர், பொள்ளாச்சி.
487) அ.க.அப்சானா பர்வீன், பத்தாம் வகுப்பு, புனித பிலோமினாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சி.
488) எம். பிரகாஷ், 9ஆம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, லாடனேந்தல்.
489) எஸ்.மாலதி, எட்டாம் வகுப்பு, ஹோலிகிராஸ் பெண்கள் பள்ளி, தூத்துக்குடி.
490) வெ. கஸ்தூரிரெங்கன், ஒன்பதாம் வகுப்பு, இ.ரெ.மேல்நிலைப் பள்ளி, திருச்சி.
491) பா.அபிஷேக், 3ஆம் வகுப்பு, மாடர்ன் மே.நி. பள்ளி, சென்னை.
492) எஸ்.ஹரிணி, ஐந்தாம் வகுப்பு, மேக்ஸ்வெல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.
493) த.கதிரவன், 10ஆம் வகுப்பு, அரசு மே.நி.பள்ளி, சிறுமுகைப்புதூர்.
494) எம்.அருண், ஆறாம் வகுப்பு, யு.ஆர்.சி.பி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு.
495) வே.பத்மா, ஐந்தாம் வகுப்பு, இந்து துவக்கப்பள்ளி, திருச்செந்தூர்
496) வெ.தனசேகர், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மே.நி. பள்ளி, நம்பியூர்.
497) ப.கிருஷ்ணகுமார், ஒன்பதாம் வகுப்பு, இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர்.
498) ச.மீராபாரதி, ஒன்பதாம் வகுப்பு, அண்ணா ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை.
499) எ.கவியரசு, ஆறாம் வகுப்பு, அவ்வை கே.எஸ்.ஆர்.மெட்ரிக் பள்ளி, திருச்செங்கோடு.
500) ப.நிர்மல் ஜஸ்டின், ஏழாம் வகுப்பு, நிர்மலா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம்.



உங்கள்




ஜெ.விண்ணரசி,
ஐந்தாம் வகுப்பு,
வேல்ஸ் வித்யாஷரம் பள்ளி,
பம்மல்.





ஆ.விஜயராகவன்,
ஒன்பதாம் வகுப்பு,
வேதலோக
வித்யாலயா, நாமக்கல்.



ஜெ.மகேஷ்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி,
பொள்ளாச்சி.

கைவண்ணம்!



க.பாண்டியராஜன்,
பத்தாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
அரித்துவாரமங்கலம்.



எஸ்.ஜி.யுவஸ்ரீ, ஏழாம் வகுப்பு,
டி.ஈ.எம்.ஜி.பெண்கள்
மேல்நிலைப் பள்ளி,
ஆர்.கே.பேட்டை.



இரா.விஷ்ணுப்பிரியா,
பதினொராம் வகுப்பு,
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி,
கோவை.



இந்திய நாடு நம் வீடு - 4

பஞ்ச், ஆப் என்ற இரண்டு பாரசீக மொழிச் சொற்களிலிருந்து வந்ததே பஞ்சாப். 'பஞ்ச்' என்றால் ஐந்து. 'ஆப்' என்றால் தண்ணீர். இங்கே ஜீலம், ஜீனாப், ராவி, பியாஸ், சட்லெட்ஜ் நதிகள் பாய்ந்து செழுமையூட்டுகின்றன. பஞ்சாபிய நிலப் பகுதியில் உள்ள மண் வளமானது. பஞ்சாபியர்கள் கடும் உழைப்பாளிகள். ஆகவே, இந்திய மாநிலங்களில் விவசாய உற்பத்தியிலும்,





• ரஞ்சித் சிங்



• பகத் சிங்

தொழில் துறையிலும் மிகவும் முன்னேறிய மாநிலமாக பஞ்சாப் விளங்குகிறது. சுமார் 50 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவு கொண்ட பஞ்சாப் மாநிலத்தின் பிரதான மொழி பஞ்சாபி. பஞ்சாபில் சுமார் 12 ஆயிரம் கிராமங்களும், 140 நகரங்களும் உள்ளன.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை நடந்தது. பஞ்சாப் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. முஸ்லிம்கள் அதிகமாக இருந்த பஞ்சாபின் பகுதி பாகிஸ்தானுக்குச் சென்றது. சீக்கியர்கள், பிற இந்துக்கள் அதிகம் வாழ்ந்த பகுதி இந்தியாவுடன் இணைந்தது. பிரிவினையின்போது, ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கலவரக்காரர்களின் தாக்குதலுக்குப் பலியானார்கள். 1966ஆம் ஆண்டில், இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் மொழி அடிப்படையில் பஞ்சாப், ஹரியானா, இமாசலப் பிரதேசம் என மூன்று மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இன்றைய பஞ்சாபின் பெரும்பான்மையான மக்கள் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள்.

மகாபாரதத்திலும், அபுல் ஃபாசல் எழுதிய 'அயினி அக்பரி' போன்ற வரலாற்று நூல்களிலும் பஞ்சாப் பற்றி பல குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பண்டைய காலத்தில் பஞ்சாப் பகுதி, 'சப்த சிந்து' என அழைக்கப்பட்டதாம். காரணம், இந்தப் பகுதியில் சிந்து, ஜீலம், ஜீனாப், ராவி, பியாஸ், சட்லெட்ஜ், சரஸ்வதி ஆகிய ஏழு நதிகள் பாய்ந்து வளப்படுத்தின. மாமன்னர் அசோகர் காலத்தில் பஞ்சாப் வழியாக ஆப்கானிஸ்தான் வரை செல்வதற்கு வசதியாக சாலைகள் போடப்பட்டதாக வரலாறு கூறுகிறது. மௌரியர், குப்தர் ஆட்சியைத் தொடர்ந்து ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் மொகலாய மன்னர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது பஞ்சாப். மொகலாயர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு, சிறிது காலம் மராத்திய மன்னர்களின் கீழ் இருந்தது. அதன் பிறகு 19 ஆம் நூற்றாண்டில், குறிப்பிடத்தக்க வகையில்

கௌதம்ராம்


ஆட்சி செய்தவர் மகாராஜா ரஞ்சித் சிங். இவர் அபாரமான கிரிக்கெட் ஆட்டக்காரர். பிரிட்டிஷ் இந்தியாவின் கிரிக்கெட் அணியில் இடம்பெற்ற இவர் பெயரில்தான் இன்றும் ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடக்கிறது.

அவருக்குப் பின் பிரிட்டிஷாரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும், பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு இணக்கமான மன்னர்களது ஆட்சியிலுமாக பஞ்சாப் இருந்து வந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பஞ்சாபின் பங்கு குறிப்பிடத்தக்கது. பஞ்சாபில் பிறந்த பகத்சிங், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கினார். வீரம் மிகுந்த பஞ்சாப் மண், இந்திய ராணுவத்துக்கு கணிசமான பங்களிப்பை இன்றளவும் செய்து வருகிறது.

பஞ்ச நதிகளின் பூமி!

அமிர்தசரஸ் நகரில்

பொற்கோயில்...



உள்ள பொற்கோவில் 1803 ஆம் ஆண்டு மகாராஜா ரஞ்சித் சிங்கால் கட்டப்பட்டது. அந்தக் காலத்தில், பொற்கோவிலைக் கட்டுவதற்கு 400 கிலோ தங்கம் பயன்படுத்தப்பட்டது. பொற்கோவிலை தர்பார் சாஹிப், ஹரிமந்திரி ஆகிய பெயர்களாலும் அழைப்பார்கள். இங்கே நாள் முழுவதும் இசையும், சீக்கியர்களின் புனித நூலான குருகிரந்தமும் ஒலிக்கிறது. 'அனந்தப்பூர் சாஹிப்' என்பது இன்னொரு முக்கிய சீக்கிய தலம். 'பரீத்கோட்' என்ற இடத்தில் 700 ஆண்டு பழைமையான, பலவிதமான கண்ணாடிகளை அழகுறப் பயன்படுத்திக் கட்டப்பட்ட கோட்டை ஒன்று இருக்கிறது.




இன்றும் ஜாலியன் வாலாபாக் சென்றால் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த சுவர்களைக் காணலாம்!

அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் என்ற பூங்கா சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடம். சுதந்திரப்போராட்டத்தின்போது, 1919 ஆம் ஆண்டில் ஏப்ரல் 13ஆம் தேதி, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகக் கூடிய மக்கள் மீது பிரிட்டிஷ் ராணுவ 'ஜெனரல் டயர்' துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார். அதில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான அப்பாவி இந்தியர்கள் பலியானார்கள். இன்றும் ஜாலியன்வாலாபாக் சென்றால் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த சுவர்களைக் காணலாம். அங்கு ஒரு அணையா விளக்கு தொடர்ந்து சுடர் விட்டுக் கொண்டிருக்கிறது.

விளையாட்டுக் கருவிகள் உற்பத்திக்குப் புகழ்பெற்ற ஊர் ஜலந்தர். தொழில் முன்னேற்றத்தில் முத்திரை பதித்த ஊர் லூதியானா. இது பின்னலாடை மற்றும் கம்பளி ஆடைகளுக்கும் பெயர் பெற்றது. இங்குதான் புகழ் பெற்ற பஞ்சாப் வேளாண் பல்கலைக் கழகம் உள்ளது. பதான்கோட், பாட்டியா, சிர்ஹிந்த் போன்றவை முக்கிய நகரங்கள்.

பஞ்சாபில் பண்டிகைகள், திருவிழாக்களுக்கும் குறைவில்லை. ஜனவரி-பிப்ரவரியில் வசந்த காலத்தை வரவேற்கும் 'பசந்த்' விழா சிறப்பானது. ஏப்ரல் மாதத்தில் பிறக்கும் புத்தாண்டை 'பைசாகி' என்பர்.




● ஜாலியன் வாலாபாக்

இது சீக்கியர்களுக்கு முக்கிய தினம். தங்கள் முதல் குருவான 'குருநானக்', பத்தாவது குருவான 'குரு கோவிந்த் சிங்' ஆகியோரது பிறந்த நாட்களை பக்தி சிரத்தையுடன் கொண்டாடுகிறார்கள்.


பஞ்சாபில் உணவு வகைகள் தனிச் சுவை கொண்டவை. ஆகவேதான் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும், அயல் நாடுகளிலும்கூட பஞ்சாபிய உணவு அளிக்கும் 'பஞ்சாபி தாபா'க்கள் மிகவும் பிரபலமாக உள்ளன. ○

காய்ந்த சருகுகள்!

கதை : [illegible] படம் : ராம்கி




அவர் என்ன பெரியதாக கேட்டு விடப் போகிறார்? நமக்குள்ள வசதியைப் பயன்படுத்திச் சலபமாக வாங்கித் தரலாம்!
மறுநாள் -
குருவே, தங்கள் தட்சணை என்ன? சொல்லுங்கள்.
எனக்கு ஒரு மூட்டை காய்ந்த சருகுகள் வேண்டும்.
என்ன? காய்ந்த சருகுகளா! இதோ உடனே கொண்டு வருகிறோம்.
மாணவர்கள் உடனே அங்கிருந்து புறப்பட்டனர்.
காட்டில் -
என்ன ஆச்சர்யம்... ஒரு சருகுகூட கிடைக்கவில்லையே!
காட்டின் எல்லையில் இருக்கும் விவசாயியைக் கேட்போம்.


விவசாயி -
அடடே! இப்பத்தான் எல்லா சருகுகளையும் அடுப்பெரிக்கப் பயன்படுத்தினேன். நீங்கள் இலைகள் விற்கும் வியாபாரியிடம் கேளுங்கள்.
வியாபாரி -
கொஞ்சம் முன்னாடியே வந்திருக்கக் கூடாதா? இலைகளைத் தைத்து தொன்னையாக்கி எல்லாவற்றையும் விற்றுவிட்டேனே!
மாணவர்கள் சோர்வுடன் குருகுலம் வந்தனர்.
என்ன மாணவர்களே... குருதட்சணையைக் கொண்டு வந்தீர்களா...?
மன்னியுங்கள் குருவே! எங்கு தேடியும் சருகுகள் கிடைக்கவில்லை.
சிறு சருகுதானே என்று அலட்சியமாக நினைக்கக் கூடாது. அதுவும் பல விதங்களில் பயன்தரும். இந்த உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் முக்கியமானவன்தான்...
...ஆகவே, யாரையும் அலட்சியப்படுத்தாமல் மதித்துப் பேசுங்கள். இதுவே நீங்கள் எனக்குத் தரும் குருதட்சணை.
அப்படியே ஆகட்டும் குருவே!

உறுப்பினர் பக்கம்



நீங்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகிவிட்டீர்களா? உங்களுக்காகவே இந்த **'உறுப்பினர் பக்கம்'** பகுதி. இதில் துணுக்கு, அறிவியல் செய்திகள், கவிதை, குட்டிக் கதை என எதை வேண்டுமானாலும் எழுதியனுப்பலாம். பிரசுரமானால் பரிசு உண்டு. உங்கள் பெயர், முகவரியுடன் மறக்காமல் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்
(உறுப்பினர் பக்கம்)
47-NP., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

நாய்க்குட்டி!

சின்னச் சின்ன நாய்க்குட்டி
செல்லமான நாய்க்குட்டி!
கறுப்பு நிற நாய்க்குட்டி
காலைச் சுற்றும் நாய்க்குட்டி!

பாலைப் பாங்காய் குடித்திடும்
பாசம் மிக்க நாய்க்குட்டி!
வாலை வாகாய் ஆட்டிடும்
வாஞ்சையான நாய்க்குட்டி!

வீட்டை அழகாய் காத்திடும்
வீரமான நாய்க்குட்டி!
சேட்டை மிகவே செய்திடும்
சோமு வீட்டு நாய்க்குட்டி!

— மு.சாய்பிரசாத்,
உறுப்பினர் எண்: 243,
எட்டாம் வகுப்பு,
பொன்னைய்யா ராமஜெயம்
பொதுப் பள்ளி, தஞ்சாவூர்



தெரியுமா?



- உலகில் முதலில் கிரானைட் கல்லில் கட்டிய ஆலயம் - தஞ்சாவூர் பிரகதீஸ்வரர்
- உலகின் ஒரே இந்து நாடு - நேபாளம்.
- ஐ.நா.சபையில் முதன்முதலில் ஹிந்தியில் பேசியவர் - வாஜ்பாய் (1987).
- வருமானவரியே இல்லாத நாடு - குவைத்.
- தமிழகத்தில் 'சரஸ்வதி தேவி'க்கு தனியாக ஆலயம் உள்ள ஊர் - கூத்தனூர்
- இலண்டன் பக்கிங்ஹாம் அரண்மனையில் உள்ள மொத்த அறைகளின் எண்ணிக்கை - 600

- கி.ஜெய்பிரியா,
உறுப்பினர் எண்: 378
யு.கே.ஜி., சக்தி மெட்ரிகுலேஷன் பள்ளி,
விருத்தாசலம்



தகவல் துளிகள்...



* தவளைகள் கண்மூலம் ஒலிகளைக் கேட்கின்றன.
* பிளாஸ்டிக் பணம் என்பது கிரெடிட் கார்டுகளைக் குறிக்கும்.
* காலில் காதுள்ள உயிரினம் வெட்டுக்கிளி.
* டெல்லியின் பழைய பெயர் ஷாஜகானாபாத்.
* மின்மினிப் பூச்சிகள் நத்தைகளை உண்கின்றன.

- த.பிரகல்யா,
உறுப்பினர் எண்: 318,
எட்டாம் வகுப்பு,
பொன்னையா இராமஜெயம் பொதுப்பள்ளி,
தஞ்சாவூர்



உயரமான பாலம் - லடாக்
உயரமான சாலை - கர்துங்லா (லடாக்)
உயரமான சிகரம் - எவரெஸ்ட் (8848 மீ.)
உயரமான மசூதி - ஹாஸன் மசூதி (மொராக்கோ)
உயரமான மரம் - கோஸ்ட் ரெட் உட் தேசிய பூங்கா
உயரமான நகரம் - வென்சுவன் (சைனா)
உயரமான தலைநகரம் - லாசா

- ம.செளம்யா, உறுப்பினர் எண்: 405,
ஆறாம் வகுப்பு,
மங்கையர்க்கரசி ந.நி. பள்ளி,
மதுரை

உயரமோ உயரம்!

கேள்வியும் பதிலும்!

கேள்வியிலேயே பதில் உள்ளது படித்துப் பார்த்து கண்டுபிடியுங்கள்!

1. யானை ஒரு மணிக்கு எத்தனை மைல் வேகம் ஓடும்?
2. ஆஸ்திரேலியாவில் பெண்ணின் திருமண வயது என்ன?
3. டிசம்பர் மாதம் எத்தனையாம் நாள் குறுகிய நாள்?
4. ஆண் தேனி முழு வளர்ச்சி பெற எத்தனை நாட்கள் ஆகும்?
5. நமது வயிற்றில் எத்தனை சதம் நீர் இருக்க வேண்டும்?
6. சனி, சூரியனைச் சுற்றி வர எத்தனை ஆண்டுகளாகும்?
7. எத்தனை வெள்ளிக் காசுகளுக்காக ஏசுவை யூதாஸ் காட்டிக் கொடுத்தான்?

- கி.இராதா கிருஷ்ணன்,
உறுப்பினர் பக்கம்: 462
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
வாசுதேவநல்லூர்



(விடை: ஒரு வினாவில் எத்தனை எழுத்துகள் உள்ளனவோ அவற்றின் கூட்டுத் தொகையே அந்த வினாவுக்கு விடையாகும்.)



சிறப்பின் எவரெஸ்ட்!

'உனக்கென ஒரு வழி' என்ற கதை தன் மீது வைத்துள்ள நம்பிக்கையை உணர்த்துகிறது. இது தேர்வு எழுதுபவருக்கு தன்னம்பிக்கை தந்துள்ளது. 'வீரா-சூரா' என்ற கதை சுறுசுறுப்பாகச் செல்கிறது.

- த.க.தமிழ்பரதன்,
உறுப்பினர் எண்: 331, ஏழாம் வகுப்பு,
வ.சோ.ஆண்கள் மேனிலைப் பள்ளி,
திருவாரூர்

'கலக்கல் காமிக்ஸ்' பகுதிக்கு 'ஓ' போட்டேன்! பல்சுவையில் 10 கதைகளும் வெகு அருமை!

- ஆர்.ஆர்.உமா, பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ ராமகிருஷ்ணா பள்ளி,
திசையன்விளை

எந்தெந்த காய்கறிகளில் என்னென்ன சத்துகள் இருக்கின்றன என்பதைப் படித்தபோது, இனிமேல் அம்மா சமைத்துக் கொடுக்கும் எல்லாக் காய்கறிகளையும் சாப்பிட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன்.

- பி.சர்வேஸ்வரன்,
மதுரை

அட்டைப் படக் கட்டுரை அருமை. ஆனால் தமிழில் வாண்டுமாமா எழுதிய 'பார்வதி சித்திரக் கதைகள்' பற்றி ஒருவரி கூட குறிப்பிடாதது நியாயமா?

- இ.பு.ஞானப்பிரகாசன், மடிப்பாக்கம்

(அது குறித்த தகவல் கட்டுரையை தாங்கள் அனுப்பினால் வெளியிடுகிறோம். - ஆர்)

குரைக்காத நாய், அசைவச் செடிகள், கூடு கட்டும் பாம்பு, 'நிலா (ஆர்டிக்டன்) பறவை... அதிசயச் செய்திகளை அறியச் செய்த முனைவர் ஆசுராவின் அரிய முயற்சிக்கு அறிவார்ந்த நன்றி!

- ச.ஆ.கேசவன்,
இனாம் மணியாச்சி

உறுப்பினர் பக்கம் மூன்றுமே முத்துக்களால் கோர்க்கப்பட்ட மாலையைப் போல் இருந்தன. 'சிறப்பின் எவரெஸ்ட்' கோகுலம் என்பதற்கு இதுவே சான்று!


- த.ராமசுந்தரராஜ்,
ஆறாம் வகுப்பு,
தூய சவேரியன் மேல்நிலைப்
பள்ளி, பாளையங்கோட்டை

ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங் - 4

ஹலோ, கோகுலம் குட்டீஸ்! தேர்வுகள் எல்லாம் முடிந்து விடுமுறையில் ஜாலியாக இருப்பீர்கள். இந்த நேரத்தில் மருத்துவர்களின் முக்கிய கருவியாகிய ரத்த அழுத்த மானியைப் பற்றித் தெரிந்துகொள்வோமா?

நம் இதயம் லப்...டப்...லப்...டப்... என்று துடிக்கிறதல்லவா? அப்போது ஒருவித அழுத்தத்துடன் ரத்தம், ரத்தக் குழாய்க்குள் உந்தித் தள்ளப்படுகிறது. அந்த அழுத்தமானது ரத்தத்தை உடலெங்கும் பாய்ந்தோடச் செய்கிறது. இதையே 'ரத்த அழுத்தம்' என்கிறோம்.

இதயம், சுருங்கும்போது அழுத்தம் அதிகமாகவும் விரியும்போது



சபாஷ்



• ரத்த அழுத்தமானி வகைகள்

குறைவாகவும் இருக்கும். ஒருவருடைய ரத்த அழுத்தம் 120/80 மி.மீ. பாதரச அளவாக இருந்தால் அது இயல்பு அளவு. இதில் 120 என்பது இதயம் சுருங்கும்போது உண்டாகின்ற 'சிஸ்டாலிக்' அழுத்தம்; 80 என்பது இதயம் விரியும்போது உண்டாகின்ற 'டயஸ்டாலிக்' அழுத்தம். ரத்த அழுத்தம் அதிகமானால் இதயத்துக்கு ஆபத்து. சிறுநீரகம் கெட்டுவிடும். பக்கவாதம் வந்துவிடும். ஆகவே நமக்கு ரத்த அழுத்தம் இயல்பாக இருக்க வேண்டியது அவசியம்!

ரத்த அழுத்தத்தை, ரத்த அழுத்த மானி (Sphygmomanometer) எனும்

டாக்டர் கு.கணேசன்

கருவியின் மூலமும், ஸ்டெத்தாஸ்கோப் கருவியின் துணையுடனும் மருத்துவர்கள் அளக்கிறார்கள். ரத்த அழுத்த மானியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் சாமுவேல் வான் பாச் (Samuel Von Basch). இவர் வியன்னா நாட்டு மருத்துவர். கி.பி. 1881ல் இதைக் கண்டுபிடித்தார்.

இவர் வாழ்ந்த காலத்தில், குதிரை, பசு, மாடு, ஆடு போன்ற வீட்டு விலங்குகளின் ரத்த அழுத்தத்தை அளப்பதற்கு ஒரு கொடுமையான முறையைப் பின்பற்றி வந்தார்கள். அதாவது, அந்த விலங்கின் கழுத்தில் உள்ள தமனி ரத்தக் குழாயை ஒரு சிரிஞ்சின் முன்பகுதியில் இணைக்கப்பட்ட ஊசிமுனையால் குத்துவார்கள். அப்போது ரத்தம் ஒரு வேகத்

வழியைக் கண்டுபிடிக்க ஆர்வமாக இருந்தார் சாமுவேல் பாச்.

1863ல் 'கார்ல்வான்' எனும் விஞ்ஞானி நம் நாடித்துடிப்பை அறிவதற்காக 'ஸ்பிக்மோகிராப்' எனும் கருவியைக் கண்டுபிடித்தார். அதாவது மணிக்கட்டில் உள்ள தமனிக் குழாயில் ஒரு ஸ்பிரிங் மூலம் அழுத்தம் கொடுக்கும்போது, அந்த ஸ்பிரிங்குடன் இணைக்கப்பட்டுள்ள லீவர் மேலும் கீழும் அசைந்து, ஒரு கறுப்புத் தாளில் வரைபடமாக வரையும். இந்த அசைவுகளின் எண்ணிக்கையை நாடித் துடிப்பு எண்ணிக்கையாக எடுத்துக் கொள்வார்கள்.



சாமுவேல்!



துடன் பீச்சியடிக்கும். அது சிரிஞ்சின் பின்பகுதியில் இணைக்கப்பட்ட ரப்பர் குழாய்க்குள் அதே வேகத்தில் தள்ளப்படும். ரத்தம் தள்ளப்படுகின்ற உயரத்தை ரப்பர்குழாய் வழியாகத் தெரிந்துகொள்வார்கள். அந்த உயரத்தை வைத்து ரத்த அழுத்தம் அதிகமா, குறைவா என்று தோராயமாக மதிப்பிடுவார்கள்.

இந்த முறையை மனிதர்களுக்கும் சில மருத்துவர்கள் பயன்படுத்தினார்கள். ஆனால், ஒவ்வொரு முறை இவ்வாறு ஊசியால் குத்தும்போது வலி கடுமையாக இருக்கும். இதற்கு ஒரு மாற்று

இந்தக் கருவிதான் சாமுவேல் பாச் ரத்த அழுத்த மானியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது. இவர் 'ஸ்பிக்மோகிராப்'பில் சிற்சில மாறுதல்களைச் செய்தார். தமனிக் குழாயில் அழுத்தம் கொடுப்பதற்கு, ஸ்பிரிங்குக்குப் பதிலாக துணிப்பட்டையைப் பயன்படுத்தினார். மணிக்கட்டுக்குப் பதிலாக புஜத்தில் அந்தத் துணிப்பட்டையைக் கட்டினார். லீவருக்குப் பதிலாக காற்றின் அழுத்தத்தைக் காண்பிக்கும் 'மீட்டர்' ஒன்றை ஒரு ரப்பர் குழாய் மூலம் துணிப்பட்டையுடன் இணைத்தார். இப்போது சாமுவேல்

பாச்சின் புதிய ரத்த அழுத்தமானி ரெடி!

நோயாளியின் புஜத்தில் துணிப்பட்டையை இறுக்கமாகக் கட்டினார். அப்போது கைக்குக் கீழே ரத்தம் ஓடுவது நின்றது. இப்போது துணிப்பட்டையின் இறுக்கத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்தார். ஒரு குறிப்பிட்ட அளவில் ரத்தம் கைக்குப் பாயத் தொடங்கியது. அப்போது மீட்டரில் இருந்த முள் நகர்ந்து ஓர் அளவைக் காட்டியது. அதுதான் அந்த நோயாளியின் ரத்த அழுத்தம் என்றார். இதைப் பயன்படுத்துவது எளிதாக இருந்த காரணத்தால் மக்கள், விஞ்ஞானிகள் இக்கருவியை ஏற்றுக்கொண்டனர்.




• நவீன ரத்த அழுத்தமானி

ஆனால், சாமுவேல் பாச் இவ்வாறு கண்டுபிடித்தது ஒருவகை ரத்த அழுத்தம் மட்டுமே. அதாவது 'சிஸ்டாலிக்' ரத்த அழுத்தம்! இவருக்குப் பிறகு வந்த ரஷ்ய மருத்துவர் 'நிக்கோலை கோட்கோஃப்' ரத்த அழுத்தத்தில் 'சிஸ்டாலிக்' ரத்த அழுத்தம், 'டயஸ்டாலிக்' ரத்த அழுத்தம் என இருவகை உள்ளன என்று சொன்னார். அந்த இரு அழுத்தங்களையும் ஒரே நேரத்தில் அளப்பதற்கு ஒரு கருவியைக் கண்டுபிடித்தார். இப்போது மருத்துவர்கள் பயன்படுத்துவது இந்தக் கருவியைத்தான்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

மருத்துவ மேதைகள் : ஆச்சாரியா சரகர்



'ஆயுர்வேத மருத்துவத்தின் தந்தை' என்று போற்றப்படும் ஆச்சார்யா சரகர் (Acharya Charaka), கி.மு.600 ஆம் ஆண்டில் வாழ்ந்த இந்திய மருத்துவ மேதை. இவர் ஒரு ரிஷியாக வாழ்ந்தவர். ஆயுர்வேத மருத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 'உடலில் உள்ள வாதம் (காற்று), பித்தம், கபம் (சளி) ஆகிய மூன்று உடலியக்கக் கூறுகளில் ஒன்று சரியில்லை எனும்போது உடலில் நோய் தோன்றுகிறது' என்பது ஆயுர்வேத மருத்துவத்தின் தத்துவம். இந்தத் தத்துவத்தைப் பின்பற்றி இவர் எழுதியுள்ள 'சரக சம்ஹிதா' எனும் மருத்துவ நூல் ஆயுர்வேத மருத்துவத்தின் வேத நூலாகக் கருதப்படுகிறது. நோய்க்கு சிகிச்சை தரும் முன்பு நோயைச் சரியாக கணிக்க வேண்டிய அவசியத்தையும், இயற்கை மூலிகைகளின் மூலம் நோய்களைக் குணப்படுத்தும் முறைகளையும் இந்த நூலில் அவர் விளக்கியுள்ளார். இதில் சுமார் ஒரு லட்சம் மூலிகைத் தாவரங்களின் மருத்துவ குணங்களை அப்போதே தெரிவித்துள்ளார். 300க்கும் மேற்பட்ட மூலிகைகளை 50 வகைகளாகப் பிரித்து, எந்த நோய்க்கு என்ன மூலிகை என்று தரப்படுத்தியுள்ளார். நோய்களைக் குணப்படுத்துவதில் உணவின் முக்கியத்துவம், உடல் உழைப்பின் அவசியம், ஓய்வு என்பது உடலுக்கு மட்டுமல்ல, உள்ளத்துக்கும் தேவை என்பது போன்ற பல கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

''கபடி விளையாட்டு கஞ்சனுக்குப் பிடிக்காதா, எப்படிச் சொல்றே?''

''அதுல சடு'குடு', சடு'குடு' அப்படினு வருதே?''

- சென்னிமலை சி.பி.செந்தில்குமார்



நிஜமாவா? தோசை மாவா?



''நானே இன்னைக்கு தோசை சுட்டேன்!''

''நிஜமாவா?''

''இல்லை, தோசை மாவுல!''

- இனாம் ச.ஆ.கேசவன்



''மீன் தொட்டியில் தண்ணியை மாத்தவே இல்லையே, ஏன்?''

''போன வாரம் ஊத்துன தண்ணியையே மீன் இன்னும் குடிக்கலம்மா, முழுசா அப்படியே இருக்கு!''

- ச.ஆ.கேசவன், கோவில்பட்டி



''கோபம் வந்தா கண்ணாடி போட்டுப்பியா, ஏண்டா?''

''கோபம் கண்ணை மறைக்குமே!''

- ஜி. சந்தியா, இராஜபாளையம்


''தெரியாத்தனமா ஒருத்தரோட 'வாத்தை' திருடி வித்துட்டேன்!''

''அப்புறம்?''

''நெஞ்சு 'டக், டக்'னு அடிச்சுக்குது!''

- அனன்யா, திருச்சி





இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள் ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி: 15.5.2008

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

விடையைச் சொல்; பரிசை வெல் – 11

1. ஜாலியன் வாலாபாக் துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்த நாள் ....
2. ஆயுர்வேத மருந்துவத்தின் தந்தை எனப்படுபவர் ....
3. கள்ளானுக்குக் கடன் கொடுத்தவர் பெயர் ....
4. ஐ.பி.எல். ட்வெண்டி - ட்வெண்டி இறுதிப் போட்டி நடக்கும் நாள் ....
5. வீரபத்ரனின் குருநாதர் பெயர் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

கோகுலம் சிறுவர் சங்கம்
உறுப்பினர்கள்


476


477


478


479


480


481


482


483


484



485


486


487


488


489


490


491


492


493


494


495


496


497


498


499


500

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Sri Lanka

